பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை (29-10-2002)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:336

## கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து

# புலிகள் குழு இன்று நள்ளிரவு தாய்லாந்துக்குப் புறப்படுகிறது

## அரச தரப்பினரும் இன்றே செல்ல ஏற்பாடு

கொழும்பு,ஒக்ரோபர்29

**நாளைமறுதினம் 31ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் புலிகள் குழுவினர் ஆறு பேரும் இன்று நள்ளிரவு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து பாங் ஹொக்கிற்குப் பயணமாகிறார்கள். அரசுத் தரப்பினர் ஏழு பேரும் கூட இன்று இரவுதான் கிளம்புகிறார்கள். எல்லோரும் ஒரே 'கதே பசிபிக்' விமானத்தி லேயே பயணம் செய்வர் எனத் தெரிகிறது.**

விமானம் இன்று இரவு (அதி காலை) 2.50இற்குப் புறப்படுகிறது. புலிகள் குழுவினர் தாங்கள் தங்கியிருக்கும் வன்னியிலிருந்து விமானப் படை ஹெலிகொப்டரில் கட்டுநாயக்கா விமானத்தளத்தில் வந்து இறங்குவர். விமானம் புறப்படுவதற்கு சற்று நேரம் முந்தியே அவர்கள் வருவார்கள். பாதுகாப்புக் கருதி இந்த ஏற்பாடு.

குழுவினரை ஏற்றிச் செல்லும் 'கதே பசிபிக் விமானம் பாங்ஹொக்கை அந்த நாட்டு நேரப்படி காலை 7.10 இற்குச் சென்றடையும்.

புலிகள் குழுவினர் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு புறப்படுவதற்கு முன்னர் தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கலந்தாலோசனை நடத்தினர்.

அவர்களைப் போலவே அரச குழுவினரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். அவர்களுக்கு வேண்டிய அறிவுறுத்தல்களைப் பிரதமர் வழங்கினார்.

அரசாங்கக் குழுவில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ் (தலைவர்), மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மகேஸ்வரன் இந்தியாவுக்கு!

கொழும்பு,ஒக்.29

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் அமைச்சரானதன் பின்னர் தமது முதலாவது வெளிநாட்டு விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ளார். தமது அந்தரங்கச் செயலாளருடன் சென்னை சென்றுள்ள அமைச்சர், அங்கு பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா, காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமி ஆகியோரைத் தரிசித்து அவர்களின் நல்லாசிகளைப் பெறவுள்ளார்.

அவரது இந்திய விஜயத்தின் பொழுது அடுத்த ஆண்டு மே மாத

(14ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சிப்பாயைக் கையளிக்கும் நிகழ்வில் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ஆர்.பி.சந்திரசேகரா, சரணடைந்த சிப்பாய் ஜெயவர்த்தன, புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் த.நிஷாந்தன் ஆகியோரைப் படத்தில் காணலாம் *(படம்: ரமணன்)*

## இராணுவக் கட்டமைப்புப் பற்றி ஜனாதிபதி - பிரதமர் பேச்சு!

கொழும்பு,ஒக்.29

இராணுவக் கட்டமைப்பைச் சீரமைப்பது தொடர்பாக ஜனாதிபதியும பிரதமரும் முப்படைத்தளபதிகளுடன் நேற்று மாலை 4மணிமுதல் இரு மணி நேரம் ஆராய்ந்துள்ளனர்.

இராணுவக் கட்டமைப்பை சீரமைப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கும் இடையில் தோன்றியுள்ள முரண்பாடான நிலைக்கு தீர்வு காண்பதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர், முப்படைத்தளபதிகள், பதில் பொலீஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இராணுவக் கட்டமைப்பில் மேற்

(14ஆம் பக்கம் பார்க்க)

### அரியாலைப் பகுதியில்

## நெடுங்குளம் வீதிக்கு மேற்கே மக்கள் குடியமர அனுமதி!

யாழ்ப்பாணம்,ஒக்.29

அரியாலை, நெடுங்குளம் வீதிக்கு மேற்குப் பக்கமாக - கொழும்புத்துறைப் பகுதியில் - மக்களை மீளக் குடியமர்த்த படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் கடந்த வாரம் கூட்டிய மாநாடு ஒன்றில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் க.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆகியோரை படை அதிகாரிகள் கொழும்புத்துறை, அரியாலை, பாஷையூர், குருநகர், நாவாந்துறை ஆகிய பகுதிகளுக்கு நேற்று அழைத்துச்சென்றனர்.

மக்கள் மீளக்குடியமர வசதியாக அந்தப் பகுதியில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் குறித்து அவர்களுக்குப் படை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

படை அதிகாரிகள் தெரிவித்த

(14ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறையில் முகமூடி நபர்கள்

## பாடசாலை மாணவனை கடத்திச்சென்று தாக்கினர்!

அம்பாறை,ஒக்.29

அம்பாறை மாவட்டத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் முகமூடி அணிந்த ஆயுத நபர்களால் வழிமறிக்கப்பட்டு, கடத்திச்சென்று தாக்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்திருக்கிறது. காயங்களுடன் மாணவன் சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளான்.

தாக்குதலுக்கு இலக்கான மாணவனுக்கு வயது 18. சம்மாந்துறை தேசிய பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் முதலாம் ஆண்டு கற்று வருகிறார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் சம்மாந்துறையில் தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் சுங்கான் காலை என்னும் இடத்தில் மோட்

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஒரு மாதகாலத்தில் இரண்டாவது சம்பவம்:

# மற்றொரு சிப்பாயும் புலிகளிடம் சரண்!

யாழ்ப்பாணம்,ஒக்.29

குடாநாட்டில் மானிப்பாய்ப் பகுதியில் பணிபுரிந்து வந்த படைச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்திருக்கிறார்.

15வயது முதல் படையில் சேர்ந்து பணிபுரிந்த சிப்பாய் ஒருவரே சக படையினரின் சித்திரவதைகள் காரணமாக முகாமிலிருந்து தப்பி வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அச் சிப்பாயை மனிதஉரிமை ஆணைக் குழு அதிகாரியிடம் கையளித்தனர்.

கம்பஹா மாவட்டம், கெலனிய நிவாஸ பொல்கென என்னும் இடத்தைச் சேர்ந்த பாலிக ஜெயவர்த்தன இரங்க இரொசான் ஜெயவர்த்தன (வயது 17) என்ற சிப்பாயே புலிகளிடம் சரணடைந்தவராவார்.

51ஆவது பிரிகேட்டின் 513ஆவது பிரிவைச் சேர்ந்த இவர் மானிப்பாய் இராணுவமுகாம் பிரதேசத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அங்கிருந்து எவருக்கும் தெரியாமல் தப்பிய இவர் யாழ் நகரப்பகுதிக்கு வந்து பொதுமக்கள் சிலரின் உதவியோடு நேற்றுக் காலை புலிகளிடம்

(14ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்புத்துறையில் படையினர் வெளியேறினர்

அரியாலை,ஒக்.29

கொழும்புத்துறை, இலந்தைக் குளம் பகுதியில் பொதுமக்களின் வீடுகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று அங்கிருந்து வெளியேறினர்.

வீடுகளில் இருந்து படையினர் வெளியேறியதை அடுத்து அந்த வீடுகள் கிராமசேவையாளர் முன்னிலையில் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வடுகளைப் பெற்றுக்கொண்ட மக்கள் மீண்டும் அங்கு மீளக்குடியமரும் பொருட்டு அவற்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. (ஐ-17)

### சிப்பாயின் கோரிக்கையை அடுத்து

## கண்காணிப்புக் குழு பொறுப்பேற்கவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.29

நேற்று விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சிப்பாயை கண்காணிப்புக் குழுவினர் பொறுப்பேற்கவில்லை.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் சிப்பாயை கையளிக்க விடுதலைப்புலிகள் முன்வந்தபோதும் சிப்பாயின் வேண்டுகோளின் பேரில் அவரை பொறுப்பேற்க கண்காணிப்புக் குழுவினர் மறுத்துவிட்டனர்.

கண்காணிப்புக் குழுவினரிடம் தன்னை ஒப்படைத்தால் அவர்கள் தன்னை படை அதிகாரிகளிடம் கையளிப்பர் என்று அஞ்சிய பிரஸ்தாப சிப்பாய் தன்னை படை அதிகாரிகளிடம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகள் இன்னமும் குறையவில்லை

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர் இப்பொழுதும் கிழக்கு மாகாணத்தில் சோதனைச்சாவடிகளின் கெடுபிடிகள் குறைந்தபாடில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இருந்து பொலநறுவை வீதி வழியாக பிற இடங்களுக்குச் செல்லும் வாகனங்களின் விவரம், பிரயாணிகளின் எண்ணிக்கை என்பன மன்னம்பிட்டியில் உள்ள சோதனைச்சாவடியில் பதியப்படுகின்றன. திருமலைக்கு வருகின்ற வாகனங்கள், பிரயாணிகளின் பொதிகள் என்பன 85ஆம் கட்டை சோதனைச் சாவடியில் சோதிக்கப்படுகின்றன.

இறக்ககண்டி சோதனைச்சாவடியில் வாகனங்கள் சோதனையிடப்படுவதோடு பிரயாணிகளும் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் மேலும் சில இடங்களில் உள்ள சோதனைச் சாவடிகளிலும் அவ்வப்போது சோதனைகள் நடத்தப்படுவதாக அறிய முடிகின்றது. (ஐ)

குருநாகல் சென்று காதலியோடு வாழ ஆசை

# என்னைப்போல வயதில் குறைந்தோர் ஏராளம் பேர் படையில் உள்ளனர்!

## சரணடைந்த சிப்பாய் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.29

என்னைப்போல வயதில் குறைந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

புலிகளிடம் நேற்று சரணடைந்த சிப்பாய் பி.ஜே.ஈ.ஐ.ஜெவர்த்தன (வயது 17) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நான் 'கொகல்வில சந்திரரத்ன மகா வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டுவரை கல்வி கற்றேன். நான் சிறுவயதிலேயே தாயை இழந்து விட்டேன். எனது ஒரே தம்பி அப்பாவுடன் கெலனிய நிவாஸ பொல்கென இருக்கிறார்.

எனக்கு இராணுவச் சீருடையில் விருப்பம் அதிகம். போலி பிறப்புச் சான்றிதழை கொடுத்து கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்து கொண்டேன்.

எனது சக சிப்பாய்கள் என்னைக் காரணமின்றி சித்திரவதை செய்து வந்தனர். அறையினுள் என்னைப் பூட்டி மின் விளக்குகளை அணைத்து விட்டு - கடுமையாகத் தாக்குவர். எனது ஒரு காதுச் செவிப்பறை வெடித்துவிட்டது. ஒரு தடவை இவர்களின் சித்திரவதையால் படுகாயமடைந்த என்னை, கொழும்பு வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்தனர். திரும்பி வந்ததும் மீண்டும் தாக்கினர்.

நான் பாதுகாப்பாக குருநாகல் சென்று எனது காதலியுடன் வாழ ஆசைப்படுகிறேன். மீண்டும் இராணுவத்தில் சேரும் எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. நான் குருநாகல் சென்றதும் கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபடப்போகிறேன் - இப்படி சரணடைந்த சிப்பாய் தெரிவித்தார்.(ஐ-9)

# எழுவைத்தீவுக் கடலுக்கு வந்த 13 இந்திய மீனவர்கள் கைது!

காரைநகர்,ஒக்.29

எழுவைதீவுக் கடற்பகுதிக்குள் ஊடுருவி மீன்பிடித்துக் கொண்டிருந்த 13இந்திய மீனவர்களை நேற்றுக் காலை கடற்படையினர் கைதுசெய்திருக்கின்றனர்.

மூன்று றோலர்களில் வந்த இந்த மீனவர்கள் அந்தப் பிரதேசத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் அந்தப் பிரதேசத்தில் ரோந்து வந்த படையினர் இவர்களைக் கைது செய்தனர் என தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் அவர்களின் றோலர்கள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றையும் காரைநகர் இறங்குதுறைக்கு கடற்படையினர் எடுத்துச் சென்றனர்.

கடற்படையினரின் காவலில் உள்ள இந்த மீனவர்கள் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

ஏ.குப்புசாமி (வயது 21), ஆர்.பாண்டியன் (வயது 24), வி.தமிழரசன் (வயது 31), கே.நாகமுத்து (வயது 17), பி.ஏழுமலை (வயது 40), கே.தமிழரசன் (வயது 20), எஸ்.ராஜிவ்காந்தி (வயது 20), எஸ்.காந்தி (வயது 25), பி.ரத்தினவேல் (வயது 45), பி.சரவணன் (வயது 22), வி.முருகவேலவன் (வயது 23), கே.அஞ்சப்பன் (வயது 25), எம்.விஜயபாலன் (வயது 25) (ஐ-3-73)

# புறக்கோட்டை தேவாலயத்தில் சமாதானத்துக்காக 'அணையாதீபம்'

கொழும்பு,ஒக்.29

நாட்டிற்கு நிரந்தர அமைதி - சமாதானம் கிடைக்கும்வரை எரிந்துகொண்டிருக்கும் 'அணையாதீபம்' புறக்கோட்டை புனித பிலிப் நேரியார் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் இடம்பெறும் இரண்டாம் கட்டப் பேச்சு வெற்றிபெறும் பொருட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த ஆலயத்தில் விசேட திருப்பலிப்பூசை வண.பிதா அல்பிரட். அலெக்ஸாண்டர் தலைமையில் நடைபெற்றது.

இத்திருப்பலிப்பூசையை பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி அதிவண.கலாநிதி தோமஸ் யோயான், கொழும்பு மறைமாவட்ட மேலதிக ஆயர் அதிவண.தோமஸ் மேரியன்ஸ், ஓய்வுபெற்ற பேராயர் அதிவண. கலாநிதி நிக்கலஸ், மார்கஸ் பெர்ணாண்டோ ஆகியோர் நடத்தினர்.

இதற்கிடையே, தென்பகுதியிலிருந்து இன்று யாழ்.குடா செல்லும் 'சௌமிய இளைஞர் நிதிய'ப்பிரதிநிதிகள் இன்றுமுதல் வியாழன்வரை சமாதானத்துக்காக அனைத்து மத ஆலயங்களிலும் நிதியத்தின் தலைவர் பி.அந்தோனிமுத்து தலைமையில் 'மௌனவிரதம்' அனுஷ்டிப்பர். (ஐ)

# எலி வைரஸ் காய்ச்சலால் 14ஆவது நோயாளி மரணம்

மாத்தறை,ஒக்.29

எலியின் சிறுநீரினால் ஏற்படும் லெப்டஸ் பய்ரோஸில் எனும் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மேலும் ஒரு நோயாளி மாத்தறை வைத்தியசாலையில் மரணமானார்.

ஊறுபொக்க-பெங்கமுவையைச் சேர்ந்த கே.கனேலிஸ் (வயது 44) என்பவரே மரணமானவராவார்.

எலி வைரஸ் காய்ச்சலினால் மாத்தறை வைத்தியசாலையில் மரணமடைந்த 14 ஆவது நோயாளி இவராவார். வயல் வேலையில் ஈடுபட்ட பின் காய்ச்சலினால் அவர் பீடிக்கப்பட்டுள்ளார்.

விசாரணை மேற்கொண்ட மாத்தறை திடீர் மரணவிசாரணை அதிகாரி எச்.பி.சிறில் த சில்வா, எலி வைரஸ் காய்ச்சலினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (ஐ)

## மாணவி வல்லுறவு வழக்கு: வைத்தியருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

புத்தளம்,ஒக்.29

புத்தளம், மதுரங்குளி பகுதியில் 16 வயது மாணவிக்கு தனியார் வைத்தியர் ஒருவர் மயக்கமருந்தை ஏற்றி பாலியல் வல்லுறவு கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட நீதிமன்றில் வைத்தியர் ஆஜர் செய்யப்பட்டதை யொட்டி மதுரங்குளி நகரில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

சுமார் 300இற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.'வைத்தியரை எக்காரணம் கொண்டும் பிணையில் விடவேண்டாம்' என்று அவர்கள் கோஷமிட்டனர்.(ஐ)

## தனியார் கல்வி நிறுவன கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலைய இயக்குநர்கள், நிர்வாகிகளுக்கான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள 'சயன்ஸ் ஹோல்' தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் - நல்லூர் கல்விக் கோட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி)

கொழும்புத்துறை மேற்கில்

# விநாயகர் ஆலய வளவில் பௌத்த விகாரையா?

அரியாலை,ஒக்.29

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கு சிறிய பௌத்த விகாரை ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இது தொடர்பாக இந்து விவகார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனுக்கு மன்றப் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றனர்.

ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் - ஆலய அர்ச்சகர் தங்கும் வீட்டின் அருகே - படையினர் விகாரையை நிறுவியிருப்பதாக மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆலயச் சுற்றாடலில் நிலை கொண்டிருக்கும் படையினரை அங்கிருந்து வெளியேற்றி ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணவும், பூசை வழிபாடுகளை தடங்கலின்றி நடத்தவும் வசதிசெய்து தருமாறு அமைச்சரிடம் கோரப்பட்டிருக்கிறது. (ஐ-17)

# அனலைதீவில் 2தினங்கள் புகைப்படக் கண்காட்சி

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை உள்ளடக்கிய 'காலத்தின் பதிவுகள்' புகைப்படக் கண்காட்சி அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடைபெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்கத் தலைவர் க.சௌந்தரராஜன் தலைமையில் ஆரம்பமாகிய வைபவத்தில் பொது ஈகைச் சுடர்களை பாடசாலை அதிபர் கு.கணேசமூர்த்தியும் கிராம அலுவலர் பொ.அன்பழகனும் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியை நயினாதீவுப் பொறுப்பாளர் இன்பன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது. தீவகக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.

கண்காட்சி மண்டபத்தினை மாவீரர் அண்ணாமலையின் தந்தையார் நா.ஐயம்பிள்ளை திறந்து வைத்தார். மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு செ.கனகசபை, சி.நடனசிகாமணி, க.ஸ்ரீமாறன், வ.வடிவழகையன், ச.சிவபாலன், செல்வி த.தாரணி, செல்வி செ.சிவனேஸ்வரி ஆகியோர் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மிக நீண்டகாலத்தின் பின்னர் அனலைதீவில் இடம்பெற்ற போராட்டம் சார்ந்த நிகழ்வாகையால் ஏராளமான பொதுமக்களும் மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கண்காட்சியையும் பார்வையிட்டனர். (ஐ-ரி)

இராமேஸ்வரத்திலிருந்து தொலைபேசி அழைப்பு:

# குடாநாட்டு மீனவரோடு இணைந்து தொழில்செய்ய தமிழக மீனவர் விருப்பம்

## தமிழக மீனவர் சங்கத்தலைவர் நேரில் வந்து பேச ஆர்வம்

வடமராட்சி,ஒக்.29

எமக்கிடையேயுள்ள மோதல்களைத் தவிர்த்து மீன்வளம் நிறைந்த இலங்கைக் கடற்பகுதியில் கைகோத்து இரு தரப்பினரும் தொழிலில் ஈடுபடுவோம்.

இப்படியான கோரிக்கை ஒன்றை வடமராட்சி மீனவர்களிடம் விடுத்திருக்கிறார் தமிழக மீனவர் சங்கத்தலைவர்.

தமிழகம் இராமேஸ்வரம் இராமானுஜம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவருடன் நேற்றுத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் தொழில்புரியும் பாக்கு நரிணைப் பகுதியில் இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவி றோலர் மூலம் மீன்பிடித்து வடமராட்சிப் பகுதி மீனவர்களுக்கு பெரும் இடைஞ்சல்களையும் இழப்புக்களையும் ஏற்படுத்திவருகின்றனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் ஊடுருவுவதை தடுக்கவேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ள இந்நிலையில் இராமேஸ்வரம் இராமானுஜம் மீனவர் சங்கத் தலைவர் நேற்றுக் காலை பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ்.சத்தியமூர்த்தி, செயலாளர் எஸ்.சூரியகுமார் ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார்.

பாக்குநீரிணையில் இலங்கையின் கடற்பகுதியான தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உள்ளிட்ட கடற்பகுதியில் மீன்வளம் அதிகமாகக் காணப்படுகிறது. நாங்கள் இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டுக்கு வருவோம். அதன் அடிப்படையில் எமது குல்லா வள்ளங்களை குறிப்பிட்ட கடல் பகுதியில் தொழில் செய்ய அனுமதிக்குமாறு வேண்டுகிறோம்.

தமிழக மீனவர்களிடம் றோலர்கள் பெரிய எண்ணிக்கையில் இல்லை. மும்பாய் போன்ற பிற மாநிலங்களைச் சேர்ந்த பெரும் முதலாளிகளின் றோலர்கள்தான் உங்கள் கடற்பகுதியை ஆக்கிரமித்துள்ளன. எமது பகுதி மீனவர்கள் குல்லா வள்ளங்கள் மூலம்தான் தொழில் செய்பவர்கள்.

உங்கள் பகுதி மீனவர்களின் வலைகளை எமது மீனவர்கள் கைப்பற்றியிருந்தனர். அவற்றை அவர்கள் விற்பனை செய்துவிட்டார்கள். அவற்றிற்கான நஷ்டஈட்டினை எமது சங்கம் பெற்றுத்தரும்.

கடற்பகுதியில் எம் இரு பகுதியினருக்கும் இடையே இருந்துவரும் பிரச்சினைகள் தொடர்பாக நாம் நேரில் சந்தித்து உரையாடி நல்லதொரு தீர்வைக் காண்போம்.

உங்களுடனும் உங்கள் சங்கப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாட எதிர்வரும் டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்துக்கு நேரில் வருகைதரவுள்ளோம்.

அவ்வேளை நேரில் கலந்துபேசி சமரச முடிவு ஒன்றினை காண்போம்.

இலங்கை மீனவர்களின் வலைகளை நாம் சேதப்படுத்தவோ அபகரிக்கவோ இல்லை. இந்திய மீனவர்கள் அடிக்கடி யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள கடற்பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டு காவலில் வைக்கும்போதெல்லாம் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் ஆதரவினையும் யாழ்ப்பாண மக்கள் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மிகவிரைவில் யாழ்ப்பாணத்துக்கு வந்து இப்பிரச்சினை தொடர்பாக கலந்து பேசி இணக்கப்பாடொன்றைக் காண்போம் என அவர் தெரிவித்தார்.

இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் இவ்வாறு கூறியபோது பதிலளித்த வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க செயலாளர் எஸ்.சூரியகுமார். கூறியதாவது:-

எங்கள் கடற்பகுதியில் வெளியாள் யாரும் ஊடுருவித் தொழில் செய்ய நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். உங்கள் கடற்பரப்பிலேயே நீங்கள் தொழில் செய்து கொள்ளுங்கள். எங்கள் கடல் பரப்பில் எங்கள் தொழிலை நாங்கள் செய்கிறோம்.

ஊடுருவி எங்கள் கடலுக்குள் நுழையும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் நாம் அவர்களை துன்புறுத்தவில்லை. மாறாக அவர்களை அன்புடன் அரவணைத்து உதவிகள் வழங்குகின்றோம்.

தங்கள் பகுதி றோலர்களின் ஆக்கிரமிப்பினால் எமது பகுதி மீனவர்களின் 25 லட்சத்துக்கு அதிகமான பெறுமதிவாய்ந்த மீன்பிடி வலைகள் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

உங்கள் மீனவர்களின் 10 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் ஊடுருவிய வேளையில் காணாமற்போய்விட்டது எனக் கூறியுள்ளீர்கள். உங்கள் மீனவர்களின் வலைகள் எதுவும் எமது மீனவர்களிடம் சிக்கவில்லை.

மீன்பிடித் தொழில் சம்பந்தமாக சமரச முயற்சிகளை நாம் மேற்கொள்ளும்போது மீனவத் தொழிலாளர்களை அனுப்பாமல் றோலர் படகுகளின் உரிமையாளர்களை கலந்து கொள்ளச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

எமக்குள்ள உரிமையுடன் கடற்றொழில் பிரச்சினை தொடர்பாக கலந்து பேசித் தீர்வுகாண நாமும் ஆயத்தமாக இருக்கிறோம் தாங்கள் நேரில் வந்து எம்முடன் பேசித்தீர்த்துக் கொள்ளவும் என அவர் பதிலளித்துச் சொன்னார். (ஐ-173)

# வலி. வடக்கு பேரணிக்கு பல அமைப்புக்கள் ஆதரவு!

வலி.வடக்குப் பிரதேச மக்கள் நாளை மல்லாகத்தில் நடத்தப்படவிருக்கும் பேரணிக்கு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பல பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகம், வலிகாமம் வடக்கு விவசாயிகள் கழகம், குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர்நலன்புரி நிலையங்களின் சமாசம், மல்லாகம் வர்த்தகர் சங்கம் ஆகியன இந்தப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளன.

தங்கள் அமைப்புக்களின் உறுப்பினர்களை இந்தப் பேரணியில் பங்குபற்றுமாறு அமைப்புகள் கேட்டிருக்கின்றன. (ஐ-3)

# தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு படைகளுக்கு கூடுதல் அதிகாரம்!

## ரஷ்ய அதிபர் புடின் நேற்று அறிவிப்பு

மொஸ்கோ,ஒக்.29

தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்காக ரஷ்ய இராணுவத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப் போவதாக அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

ரஷ்ய விசேட படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தி, மொஸ்கோ பணய நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இரண்டு நாள்களின் பின்னர் புடினின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

ரஷ்யா எந்தவொரு மிரட்டல்களுக்கும் அடிபணிந்து போகாது என்றார் புடின்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக படையினர் தற்போது நடைமுறைப்படுத்தி வரும் நடவடிக்கைகளை மாற்றும்படி தான் படை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக அதிபர் புடின் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கலையரங்க பணய நாடகத்தில் உயிரிழந்தவர்களுக்கான துக்கதினம் நேற்று மொஸ்கோவில் அனுஷ்டிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களின் உறவினர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர். உயிரிழந்தவர்களுக்காகப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன. அனைவரும் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிட நேர கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி விட்டே தமது அன்றாடப் பணிகளை ஆரம்பித்தனர்.

பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கும் மீட்பு நடவடிக்கையின் போது உயிரிழந்தவர்களுக்கும் உதவிகள் வழங்கப்படும என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# மீட்பு நடவடிக்கை நடந்தது எப்படி?

## விவரிக்கிறார் படை அதிகாரி

மொஸ்கோ,ஒக்.29

பயங்கரவாதிகளிடமிருந்து 750 இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகளை ரஷ்ய விசேட படை மீட்ட நடவடிக்கை குறித்து எந்தத் தகவலையும் வெளியிடக்கூடாது என்று கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

எனினும், மீட்பு நடவடிக்கை எப்படி என்பது பற்றிய தகவலை ரஷ்யாவின் 'நியூஸ் டொட் கொம்' என்னும் இதழ் வெளியிட்டுள்ளது.

நடவடிக்கையில் பங்கேற்ற ஓர் அதிகாரி, அந்த இதழுக்கு அளித்த பேட்டியை அது வெளியிட்டுள்ளது.

"முதல் சனிக்கிழமை காலை 3 மணிக்கு அதிரடித் தாக்குதல் நடத்தப்படும் என்ற செய்தியைக் கசிய விட்டோம். உடனே, பயங்கரவாதிகள் உஷாரானார்கள். துப்பாக்கியால் சுட்டனர். ஆனால், நாங்கள் தாக்கவில்லை.

உடனே அவர்கள் கண்காணிப்பைத் தளர்த்தினர். அதைப் பயன்படுத்தி, அதிகாலை 5 மணியளவில் தூக்க வாயுவைச் செலுத்திவிட்டு உள்ளே புகுந்தது விசேட படை.

"உடல் முழுவதும் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு இருந்த பெண் பயங்கரவாதிகள் பலர், தூக்க வாயுவால் மயங்கிக்கிடந்தனர்.

"தூங்கிக்கொண்டிருந்த அவர்களைத் தலையில் சுட்டுக் கொன்றனர் அதிரடிப் படையினர்.

"இது கொடூரமானது. ஆனால், உடல் முழுவதும் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டிருந்த தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்களை அந்த நேரத்தில் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

"18 பெண் பயங்கரவாதிகள் உட்பட 50 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்" என்று அந்த அதிகாரி கூறியுள்ளார். மீட்பு நடவடிக்கையின் போது பணயக்கைதிகள் 100 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்த போதிலும், அதிரடிப் படைக்கு கிடைத்த வெற்றியாக இது கருதப்படுகிறது.

# மீட்கப்பட்ட போது என்ன நடந்தது?

## ரஷ்ய அரசு மீது அழுத்தம் அதிகரிப்பு

மொஸ்கோ,ஒக்.29

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ கலையரங்கில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களை மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்துமாறு ரஷ்ய அரசுமீது அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த மீட்பு நடவடிக்கையின் போது ரஷ்ய விசேட படையினர் பயன்படுத்தியது எந்த வகையான விஷ வாயு என்பதையும் ஏன் அது பயன்படுத்தப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்துமாறு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களின் உறவினர்களும் மனித உரிமை அமைப்புகளும் வெளிநாட்டு தூதரகங்களும் அரசுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்துவருகின்றன.

மீட்கப்பட்டவர்களில் பெரும் பாலானவர்கள் ரஷ்யப் படையினர் பயன்படுத்திய வாயுவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது மீட்கப்பட்ட 700 பேர்களில் 650 பேர்வரையில் இந்த வாயுவின் விஷத் தாக்குதலுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 150 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 45 பேரின் நிலைமிக மோசமாக உள்ளது.

மீட்பு நடவடிக்கையின் போது உயிரிழந்த பணயக்கைதிகளில் பலரும் இந்த விஷவாயுத் தாக்குதலினாலேயே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பணயக்கைதிகளின் எண்ணிக்கையும் 117 ஆக அதிகரித்துள்ளது.

ரஷ்யா 'வேலியம்' வாயுவைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"திடீரென எங்களுக்கு தூக்கம் வந்தது. சிந்தனை குழம்பியது; ஆனால், புகைமண்டலம் எதுவும் தென்படவில்லை. இரசாயன அல்லது விஷவாயு வாசனை எதையும் நாங்கள் உணரவில்லை" என்று மீட்கப்பட்ட பணயக்கைதிகள் பலர் கூறினர்.

"தூக்கத்தை ஏற்படுத்தக் கூடிய 'வேலியம்' வாயுவை ரஷ்யர்கள் பயன்படுத்தியிருக்கலாம்; அல்லது 'பி இஸட்' வாயுவாகவும் அது இருக்கலாம். இது குறித்து ஆய்வுகள் 1960 ஆம் ஆண்டுகளில் நடந்தன. 'பி இஸட்' வாயு மிக மெதுவாக செயலாற்றக் கூடியது. கலவரம் செய்வோரை அடக்கவும் அந்த வாயு பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுவதுண்டு.

" 'வேலியம்' வாயு தூக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. அளவு கூடினால் சுவாசப்பிரச்சினையை ஏற்படுத்தி விடும்; உடலின் முக்கியமான உறுப்புகளுக்கு ஒக்ஸிஜன் செல்வதும் தடைப்படும்"- என்றும் வேர்ஜீனியா பல்கலைக்கழகத்தில் மயக்கவியல் மருத்துவத்துறை இயக்குநராகவுள்ள டாக்டர் கிறிஸ்டோபர் ஹெறால்ஸ்டிஜ் கூறினார்.

இத்தகைய ஒரு வாயுவை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தியதாலேயே இவ்வளவு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க நிபுணர்கள் கருதுகின்றனர்.

எந்த வகையான வாயுவை ரஷ்யா பயன்படுத்தியது என்று சொன்னாலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க அது வசதியாக இருக்கும் என்று அமெரிக்க தூதரகம் ரஷ்ய அரசிடம் கேட்டுள்ளது. (ம)

மொஸ்கோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளாக இருந்தவர்களில் ஒருவர் ஆஸ்பத்திரிக்கு வெளியே நிற்கும் தனது உறவுகளை நோக்கி சோகம் ததும்ப அழுதபோது .....



# ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலை குமுற ஆரம்பித்தது

ரோம்,ஒக்.29

ஐரோப்பாவின் மிகப்பெரியதும் செயற்றிறன் மிக்கதுமான - இத்தாலியின் சிசிலித் தீவில் உள்ள - எரிமலை மீண்டும் வெடித்துக் குமுற ஆரம்பித்துள்ளது. அதிலிருந்து புகைமண்டலமும் எரிமலைக் குழம்புகளும் வெளியேற ஆரம்பித்துள்ளன.

சிசிலியின் சுற்றுலா மையங்களை நோக்கி எரிமலைக் குழம்பு ஓடுகின்றது. இதனையடுத்து தீவின் விமான நிலையமான கற்றானியா மூடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று மௌண்ட் எட்னா வெடிக்க ஆரம்பித்தது. அது வெடித்து குழம்புகளை வெளித்தள்ள ஆரம்பிப்பதற்கு முன்னர் சுமார் 200 நில அதிர்வுகளை சிசிலியின் கிழக்குப் பகுதியில் உணரக் கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ரிசடர் அளவுகோலில் அவை 2.9 புள்ளி முதல் 3.5 புள்ளி வரை பதிவாகியுள்ளன என்று இத்தாலிய எரிமலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

எரிமலைவெடிப்பதனால் எங்காவது தீப் பிடிக்கக்கூடும் என்பதால் அதனை எதிர்கொள்ள தண்ணீருடன் பல விமானங்கள் தயார் நிலையில் இருப்பதாக கற்றானியாவில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நகரப் பகுதியில் 3லட்சத்து 30 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். அவர்களுக்கு இப்போதைக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், அங்குள்ள சில ஹோட்டல்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன.

"கற்றானியாவில் நிலைமை தற்சமயம் எமது முழுக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. எந்த ஒரு விடயத்தாலும் அச்சுறுத்தல் இல்லை" - என்று நகர மேயர் உம்பேர்டோ ஸ்கபக்நினி தெரிவித்தார்.

# ஈராக் மீதான போர் விவகாரத்தில் ஐ.நா. மீது அமெரிக்கா அழுத்தம்

நியூயோர்க்,ஒக்.29

ஈராக் தொடர்பான விவகாரத்தில் என்ன செய்யப் போகின்றோம் என்பது தொடர்பாக ஐ.நா. இன்னும் சில நாள்களுக்குள் முடிவு செய்யவேண்டும் என்று அமெரிக்கா சமிக்ஞை காட்டியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக விவாதிப்பதை விடுத்து என்ன செய்யப் போகின்றது என்பது குறித்த அடிப்படைத் தீர்மானத்தை ஐ.நா. அடுத்த வாரத்துக்குள் எடுக்கவேண்டும் என்று அமெரிக்க வெளி விவகாரச் செயலா கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

ஆசிய பொருளாதார மாநாட்டில் பேசிய பவல் "முடிவு இன்றிச் சென்று கொண்டிருக்கும் இந்த விவாதத்தை நாம் மேலும் தொடர முடியாது" - என்றார்.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும் புதிய பிரேரணை ஒன்றை அமெரிக்கா மிக அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்திருந்தது. அதற்கு ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவற்றிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்நிலையில் அது குறித்த விவாதம் பாதுகாப்புச் சபையில் இடம்பெற்று வருகின்றது.

அதேசமயம் -

ஈராக் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று அமெரிக்க நகரங்களிலும் உலக நாடுகளின் முக்கிய நகரங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவை அதிகரித்து வரும் நிலையில் விரைவில் பாதுகாப்புச் சபையில் தனது பிரேரணையை நிறைவேற்றிவிட அமெரிக்கா துடிக்கின்றது. இதற்காக அது ஐ.நா.மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. (ம)

கொலின்பவல்




# வறுமை காரணமாக பங்களாதேஷில் பெண் குழந்தைகளுக்கு பால்ய விவாகம்

## 30 ஆண்டுகளில் 60 லட்சம் சிறுமிகளுக்கு இப்படி நடந்தது

டாக்கா,ஒக்.29

பங்களாதேஷில் நிலவும் கடுமையான வறுமை காரணமாக குழந்தைகளை வளர்க்க முடியாமல் அவதிப்படும் குடும்பத்தினர் தமது பெண் குழந்தைகளை சிறுமிகளாக இருக்கும் போதே பால்ய விவாகம் செய்து கொடுக்கிறார்கள். கடந்த 30 ஆண்டுகளில் இவ்வாறு 60 லட்சம் சிறுமிகள் பால்ய விவாகம் செய்து கொடுக்கப்பட்டுள்ளார்கள் என்று அண்மைய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு பால்ய விவாகம் செய்து கொடுக்கப்படும் சிறுமிகளில் பலர் விவாகரத்துச் செய்யப்படுவதாகவும் அந்த ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் 13கோடி மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 90 சதவீதம் பேர் முஸ்லிம்கள். முஸ்லிம் சட்டப்படி 18 வயதுக்கு குறைவான பெண்களும் 21வயதுக்குக் குறைவான ஆண்களும் திருமணம் செய்யக்கூடாது.

வறுமை காரணமாக சட்டத்தை மீறி பால்ய விவாகங்கள் அங்கு பெருமளவில் நடந்து வருகின்றன. பெண் குழந்தைகளை வளர்ப்பதற்கு வசதி இல்லாத ஏழைப் பெற்றோர், அவர்களை சிறுவர்களுக்கு திருமணம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க தூதரக அதிகாரி ஜோர்டானில் சுட்டுக்கொலை!

அமான்,ஒக்.29

ஜோர்டான் நாட்டின் தலைநகரான அமானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணிபுரியும் அலுவலர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் தகவல் அமைச்சர் மொஹமட் அட்வான் தெரிவித்தார்.

லோரன்ஸ் போலே என்ற நபரே கொல்லப்பட்டவராவார். கிழக்கு அமானில் உள்ள அவரது வீட்டின் முன்பாக வைத்தே அவர் சுடப்பட்டுள்ளார். அவர் அமெரிக்கத் தூதரகத்தின் சர்வதேச முன்னேற்ற நிலையத்தில் பணியாற்றி வந்தார்.

"அடையாளம் தெரியாத துப்பாககிதாரி ஒருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இதனால் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். காலை நேர உடற்பயிற்சிக்காக அவர் தனது வீட்டை விட்டு வெளியேறிய சமயம் இந்தச் சம்பவம் இடம பெற்றுள்ளது" - என்றார் அமைச்சர் அட்வான்.

இந்தக் கொலை குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது அல்கெய்டா தீவிரவாதிகளின் வேலையாக இருக்கலாம் என்று அமான் பொலிஸார் ...

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

NISSAN VANETTE VAN 50 டீசல் வாகனம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (9867)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகு சாதனப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடிவீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம். (9900)

252 - இலக்கமுடைய டொல்பின் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: இராசலிங்கம், இல.44, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி (ஜெசீ கொமினிக்கேசன் அருகில்) (9962)

## காணி விற்பனைக்கு

செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் நன்னீர்க் . . . டன் 3 பரப்பு 16 1/8 குளியும் உள்ள காணி உடன் விற்பனைக்குண்டு. (1பரப்பு - 75,000/-). தரகர் தேவையில்லை. நேரடியாகத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: துரைசிங்கம் ஈஸ்வரி அம்மா, 70, சட்டநாதர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 222-3873. (9964)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நத்தாரை முன்னிட்டு Prima Broiler குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டிருக்கின்றது. ஒருநாள் குஞ்சுகளிற்கு தடுப்பு மருந்து இலவசம். உடனபதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9949)

## மணமகள் தேவை

1967 பிறந்த, சதய நட்சத்திரம், 2 ஆம் பாதம், ஜேர்மனியில் வதியும் மணமகனுக்கு படித்த, அழகான, ஜேர்மனியில் வதிவிட உரிமையுள்ள மணமகள் தேவை. மணமகனுக்கு 6-8 வயது வித்தியாசம் இருத்தல் வேண்டும். தொடர்பு:- இ.மாணிக்கம், "இ. . தினகிரி", பளவி வீதி, உரும்பிராய் கிழக்கு. (9983)

## தவறிவிட்டது

ஒரு பவுண் எடையுள்ள தங்கச சங்கிலி விளான், பண்டத்தரிப்பு, சித்தங்கேணி வரை பிரயாணம் செய்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். கருணாகரன் கிரிகடை, மூளாய். (9981)

61, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கா.லோகநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.402272406V) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (9997)

சந்நிதி றோட், தம்பாலை, அச்சுவேலியைச் சேர்ந்த ந.விக்கினேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.652240941V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'விக்னா இன்றஸ்றீஸ்', வதிரி றோட், உடுப்பிட்டியில் ஒப்படைக்கவும்.(9996)

## வீதி சேதம்; மக்கள் சிரமம்

கோண்டாவில் கிழக்கில் உள்ள சென். செபஸ்தியார் வீதி, முற்றாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

வீதியில் அமைந்துள்ள குழிகளில் மழை நீர் தேங்கி நின்று சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் அதனூடாகச் சென்றுவரும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

வீதியின் குறிப்பிட்ட சில இடத்தில் இடிந்த கட்டடங்களின் கற்கள், உடைந்த ஓடு, சீற்துண்டுகள் என்பன சீரற்றமுறையில் போடப்பட்டுள்ளதாலும் வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

மே . . . திருத்தி இயல்பு நிலைக் . . . ண்டு வருவதற்கு ஏற்பாடு . . . மாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் இதுவரை உரிய தரப்பினர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## 26மி.மீற்றர் மழை பதிவு

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் நேற்று திங்கட்கிழமை காலை 9மணி வரை 26 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

இதேவேளை-

வெப்பநிலை 24.0 'சி' இல் இருந்து 30.5'சி'வரை காணப்படுகிறது.(ம-8)

## பட்டப்பகலில் புத்தளத்தில் நடந்த கொள்ளை!

புத்தளம் நகரின் மத்தியிலுள்ள ஷினாஸ் நகைமாளிகையில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் பயங்கரக் கொள்ளையொன்று இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 3.10 மணியளவில் வான் ஒன்றில் வந்த ஆறு கொள்ளையர்கள் கைத்துப்பாக்கி, ரி-56 ரக துப்பாக்கி ஆகியவற்றால் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நகைகளை கொள்ளையிட்டனர். சுமார் 16 லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த 200 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

கடை உரிமையாளர் என்.பி.ராசிக துப்பாக்கிச் சூட்டிலிருந்து தெய்வாதனமாகத் தப்பினார். கடைசேதமடைந்துள்ளது. கொள்ளையிட்டபின் ஆகாயத்தை நோக்கி கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தப்பிச சென்றுள்ளனர்.

புத்தளம் பொலீஸார் கொள்ளையாளர்களைத்தேடி வலைவிரித்துள்ளனர்.(ஐ)

## பாவனைப் பொருள்கள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய்.ஒக்.29

தரை வழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் வீட்டுப் பாவனைப் பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளது.

18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கே பிரதேச செயலகத்தில் வைத்து இப்பொருள்கள் வழங்கப்பட்டன. குடம், சமையற்பாத்திரங்கள், சாப்பாட்டுக் கோப்பை, தண்ணீர் குவளை (கப்), பிளாஸ்ரிக் பாய், அரிக்கன் லாம்பு ஆகிய பல்வேறு வீட்டுப் பாவனைப் பொருள்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. (ம-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த மாணவனும், 394, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள "சிவதர்ஷன் ஸ்தாபன" உரிமையாளர் சிவசர்மா கமலநாதன் அவர்களின் மகனுமாகிய

### செல்வன் துவாரகன்

அவர்கள் 2002ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் கல்வியில் சிறப்படைய எல்லாம்வல்ல காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் துணைபுரிய வேண்டுகின்றோம்.

பா.சபாரத்தினசர்மா (மாமா).
ச.லலிதாம்பாள் (அத்தை).
மச்சான்மார் - அகிலன், ராகவன்.

காரைநகர். (10000)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 14 . 04 . 1924



இறப்பு 29 . 09 . 2002

### அமரர் வைரவி வேலுப்பிள்ளை

அன்பு தந்து அரவணைத்து
செல்வம் தந்து செழிக்க வைத்து
பண்பு தந்து பலர் புகழ வைத்து
மணவாழ்வில் நல் துணை தந்து
இன்ப வாழ்வை எமக்களித்து
இனிமை கண்டாய் எங்கள்
தெய்வமானாய்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


29-10-2002 இதழில்

சுடர் ஒளி

விலை -14/-




குடாநாட்டில் மீண்டும் சூடுபிடிக்கும் மனிதத் தலைவிவகாரம்

பேச்சுக் களத்தில் பிரபா இறக்கியுள்ள அமர்க்களமாடிய இரு - இளஞ்சிங்கங்கள்

முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கடி தீர்வில் ஹக்கீம் தீவிரம்

அரசியல் நெருக்கடியால் பின்னடைவை எதிர்நோக்கும் கைதிகள் விவகாரம்

மதமாற்றத்தைத் தடுக்கும் சட்டத்தை ஜெயலலிதா கையில் எடுத்தது ஏன்?

இருதய வியாதி, பாரிசவாதம் ஏற்பட உயர் இரத்த அழுத்தமும் காரணம்.

சைக்கிள் ஓடக் கற்றுக்கொள் நகைச்சுவை விருந்து

கொலை! பிணம்!! பணம்!!! க்ரைம் டயறி

ஊரே திருந்தி விட்டாலும் அரட்டைக்கு ஆள் இருக்கு. (தேரடி)

மற்றும் அரசியல் அம்பலம் அலைகளின் காவியம், சிறுகதை, குறுங்கதை, சிறுவர் பகுதி உட்பட பல்வேறு அம்சங்கள்.

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்கவைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!

உதயன்

## தாராள போக்கை தவறாக எண்ணலாமா?

இரண்டு தசாப்தகால இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் வேளை இது.

இரண்டாவது சுற்றுப்பேச்சுக்கள் நாளைமறுதினம் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்குக்கு அருகே நொக்கம்பெத்தம் நகரில் நடைபெறவுள்ளன.

'வெண்ணெய் திரண்டு வரும்வேளையில் தாழியை உடைக்கும்' முயற்சியாக இந்தச் சமயத்தில் புதிய இழுபறியைத் தொடங்கியிருக்கின்றது முஸ்லிம் காங்கிரஸ்.

முஸ்லிம்களின் பிரதிநிதியாகவோ, முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதியாகவோ அல்லது அரசுத் தரப்பின் முஸ்லிம் பிரதிநிதியாகவோ பேச்சுக்களில் பங்குபற்றுவார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

தங்களுக்குள் திரைமறைவில் செய்துகொள்ளப்பட்ட முன்னேற்பாட்டு உடன்பாட்டின்படியோ அல்லது உடன்பாடின்றியோ கட்சித் தலைவர் ஹக்கீம் ஒருபுறமும் அவரது கட்சியைச் சேர்ந்த எட்டு எம்.பிகள் மறுபுறமுமாக நின்றுகொண்டு இழுபறிப்பட்டு, அமைதித் தீர்வுகாணும் முயற்சியை அல்லோலகல்லோலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"தாய்லாந்துப் பேச்சுக்களில் ரவூப் ஹக்கீம் அரசுப் பிரதிநிதியாகப் போகட்டும். முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தாய்லாந்தில்தான் இருக்கின்றது என்று நாம் நம்பவில்லை. இங்கு பிரதமருடன் நாம் நடத்தும் பேச்சிலேயே தீர்வு உள்ளது" - என்று முஸ்லிம் காங்கிரஸின் கிளர்ச்சி எம்.பிக்கள் அணிக்குத் தலைமை தாங்கும் ஏ.எல்.எம்.அதாவுல்லா கூறுகின்றார்.

நல்லது, முஸ்லிம்கள் அப்படியே செய்துகொள்ளட்டும்.

அரசுடன் பேசி - பிரதமருடன் உரையாடி - தங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று முஸ்லிம் தலைவர்கள் நம்பினால் அதன்படி அவர்கள் செயற்பட அனுமதிப்பதுதான் நல்லது - வீணாக தற்போதைய சமாதானப் பேச்சு மேடைக்கு அவர்களை இழுத்துவராமல்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டி - தங்களது உரிமைகளை நிலைநாட்ட வேண்டி - ஆயுதமும் ஏந்திப் போராடியவர்கள் தமிழர்கள்தான். உரிமையையும், உடைமையையும், இரத்தத்தையும் இழந்து தியாக வேள்வி நடத்தியவர்களும் அவர்கள்தான்.

ஈழத் தமிழரின் நியாயமான போராட்டத்தில் மொழியால் இணைந்த முஸ்லிம்கள், காத்திரமான பங்களிப்பைச் செய்யவில்லை என்ற ஆதங்கம் - ஆவேசம் - தமிழர்களுக்குண்டு.

விடுதலைப் போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்யாமல்விட்டது மட்டுமல்லாமல் விடுதலைப் போராட்டத்தை அழிக்கவும் முஸ்லிம் தலைவர்கள் துணைபோனார்கள் என்பது கடந்தகால வரலாறு.

தமிழரின் நியாயமான விடுதலை வேள்வியை, தன்னுடைய அரச பயங்கரவாதம் என்ற கொடூரமுகம் கொண்டு அழித்து, அடக்க முயன்ற சிங்களப் பேரினவாத அரசுகள், கவிழ்ந்துவிடாமல் காலத்துக்குக் காலம் முண்டு கொடுத்துக் காப்பாற்றி வந்த முஸ்லிம் தலைமைகளை ஈழத்தமிழர்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.

தாங்கள் உயிரையும், உடைமைகளையும், இரத்தத்தையும் சிந்தி தமிழர்கள் போராட்டச் செய்கை பண்ணியபோது, அந்த முயற்சியில் இணைந்து பாய்ச்சல்பட மறுத்தவர்கள், இப்போது விளைச்சலில் பாகம் கேட்கும் உரிமையோடு பங்காளி போன்று வந்து நிற்கின்றார்கள்.

அந்தப் பங்காளிப் பேச்சுக்கு அவர்களுக்கும் இடங்கொடுத்து - சரியாசனம் வழங்கி - சமாதான முயற்சியைத் தொடர புலிகள் வழிவகுத்தார்கள். எப்படியாயினும், இந்த நீண்ட இனப்போருக்கு ஓர் அமைதித் தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற புலிகளின் தணியாத தாகமே, வழமையான அவர்களின் இறுக்கமான பிடிவாதப் போக்கைவிட்டு - முஸ்லிம்களின் விடயத்தில் - அவர்களை இவ்வளவு தூரம் கீழே இறங்கிவரவைத்தது.

ஆனால், அந்தத் தாராள மனப்போக்கின் தன்மையைத் தவறாகப் புரிந்துகொள்ள சில முஸ்லிம் தலைவர்கள் முடிவுசெய்துவிட்டார்கள் என்பதைத்தான் அவர்களின் இப்போதைய போக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது.

தமக்குரிய தீர்வை பிரதமருடன் மட்டுமே பேசி கண்டுவிடலாம் என்று முஸ்லிம் தலைவர்கள் எண்ணினால் அதற்கு அவர்களை அனுமதித்து, விட்டுவிடுவதே நல்லது.

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குக் காணி இல்லாததைக் கண்டித்து நாளை பேரணி!

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு இதுவரை ஒரு நிரந்தர காணி இல்லாமையைக் கண்டித்து நாளை புதன்கிழமை கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி பலாலி வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து யாழ். செயலகத்திற்குச் செல்லவுள்ளது.

பிரதமர், கல்வி அமைச்சர் ஆகியோரிடம் கையளிப்பதற்கான மகஜர்கள் யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன. இதன் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்று யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றது.

இதில் உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

எமது நிறுவனம் கடந்த பல வருடங்களாக தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது. இலங்கையில் உள்ள ஏனைய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களைவிட யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்தான் கூடிய மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். எனினும், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏதும் இங்கு இல்லை. எனவே, எமக்கென சொந்தக் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு நிரந்தர கட்டடம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இது தொடர்பான விடயத்தை நாம் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்திற்கு பலமுறை சுட்டிக்காட்டியிருந்தோம். எனினும், ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை இடம்பெறவில்லை.

எமது தலைமையகத்துடன் தொடர்புகொண்டபோது நிதி இல்லை என எமக்குக் காரணம் கூறப்பட்டது. ஆனால், வேறு உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் அவ்வேளையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமக்கு இப்போது அவசியமான தேவையாக உள்ளது எமது நிறுவனத்திற்கென ஒரு சொந்தக் காணி. அது இருந்தால் வெளிநாட்டு நிறுவனம் பல எமக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத்தரத் தயாராகவுள்ளன. கட்டட வசதியின்மையால் எமது நிறுவனத்திற்குப் புதிய மாணவர்களை உள்வாங்குவதிலும் பிரச்சினைகள் உள்ளன.

எனவே, எமது நிறுவனத்திற்கு விரைவில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்படவேண்டும். இப்பேரணியினூடாக நாம் விடுக்கும் கோரிக்கைக்குத் தகுந்த பதில் கிடைக்காவிடில் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தனர். (ம-8)

# எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் அகதிகளாக வாழ்வதற்கு சிங்களவரே காரணம்

## எம்.எஸ்.செல்லச்சாமி உரை

கொழும்பு,ஒக்.29

இலங்கையில் மூண்ட யுத்தத்தால் இடம்பெயர்ந்து எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இன்று தமிழர்கள் தஞ்சம் புகுந்துள்ளார்கள் என்றால் இதற்குக் காரணம் சிங்களவர்களே!

- இப்படிக் கூறினார் இ.தொ.கா. உபதலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி.

கடந்த சனிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எம்.எஸ்.செல்லச்சாமி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் இனவாத அரசியலின் முதலாவது பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் மலையக மக்களே. அதன் ஆரம்பக்கட்டமாக அவர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு அநாதரவாக்கப்பட்டனர்; நடுத்தெருவுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இலங்கையில் தனிநாடு என்ற கோரிக்கையை பிரபாகரன் முன்வைக்கவில்லை. தமிழரின் தலைவராக அப்போது விளங்கிய தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்தான் அந்தக் கோரிக்கையை முன்வைத்தார். தனிநாட்டுக் கோரிக்கையின் காரணமாக, தமிழ்த் தலைவர்கள் நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேற வேண்டிய ஒருநிலைகூட உருவாகியது.

அதன் எதிரொலிதான் இன்று எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்குத் தமிழர் அகதிகளாகச் சொல்லவேண்டிய நிலை. இதனால், உலகம் முழுவதும் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தெரியவந்தன.

உலகத்திலேயே அகதிகளுக்கு என ஒரு தனி அமைச்சு நிறுவப்பட்டிருப்பதும் இலங்கையில் மட்டும்தான்.

சர்வதேச நாடுகள் இலங்கையை இன்று உற்றுநோக்குவதற்கும் இந்த அகதிகள் பிரச்சினையே பிரதான காரணம் ஆகும். புலம்பெயர்ந்த தமிழர்கள் மொழியையும், கலாசாரத்தையும் பாதுகாத்து வருகிறார்கள். எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இன்று இலங்கைத் தமிழர்கள் குடியேறியுள்ளார்கள் என்றால் அதற்குக் காரணம் சிங்களவர்கள்தான்.

இன்று இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டு இனவாதம் பேசும் ஜே.வி.பியினரே இலங்கையில் பயங்கரவாதத்தை உருவாக்கி, நாட்டில் அவசரகாலச்சட்டத்தைக் கொண்டுவருவதற்குக் காரணமானவர்கள். ஜே.வி.பியின் தலைவர் யாழ்ப்பாணத்தில் சிறையில் இருக்கும்போது அவரைத் தமிழ் அதிகாரிகள் பாதுகாத்து வைத்திருந்தார்கள். அந்த நன்றியும் அவருக்கு இருந்தது.

ஆனால், சிங்களப் பகுதியில் இருந்தபோது சிங்கள மக்களே அவரைக் காட்டிக்கொடுத்தார்கள் - என்றார் செல்லச்சாமி.

### வி.ரி.தமிழ்மாறன்

சட்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தனதுரையில் குறிப்பிட்டதாவது:-

ஓர் இனத்தின் கலாசார, பாரம்பரிய, பண்பாட்டு இலக்குகள் மீது எப்படியான யுத்தம் வந்தாலும் தாக்குதல் மேற்கொள்ள முடியாது என்று சர்வதேச சட்டத்தில் சொல்லப்படுகிறது. அப்படித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் அது தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகும்.

1951ஆம் ஆண்டு சர்வதேச உடன்படிக்கையின்படி ஓர் இனத்தின் மரபுகளை இல்லாதொழிப்பதும் இனப்படுகொலைக்குச் சமமாகும். யூகோஸ்லாவியாவில் இப்படி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பலம் குன்றிய இனங்களை இல்லாதொழிக்க அவர்களின் பாரம்பரியங்களை முதலில் இல்லாமற்செய்வதே பிரதான யுத்த உத்திகளாகக் கையாளப்படுகின்றன. இந்திய நாட்டின் ஒரு பகுதியில் உருவாக்கப்பட்ட நெற்பயிரை அமெரிக்காவுக்குக் கொண்டுசென்று உற்பத்தி செய்வதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் இந்தியா வழக்குத் தொடர்ந்துள்ளது.

தனது நாட்டுக்குச் சொந்தமான நெல்லை அமெரிக்கா உற்பத்தி செய்கின்றது எனக்கூறி இந்த வழக்கு.

இந்த வகையில் ஓர் இனத்தின் உரிமை எப்படிப்பட்டது என்பதை உணரவேண்டும் - என்றார்.

### சிங்களவர்களுக்கு ஏழு பிராந்தியங்கள் என்றால்

# தமிழ்பேசும் மக்களுக்கு இரு பிராந்தியங்கள் கூடாதா? அதில் ஒன்று முஸ்லிம்களுக்கும் அமைந்தால் என்ன?

## கேட்கிறார் சேகு இஸ்ஸதீன் எம்.பி.

இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்களவர்களுக்கு ஏழு பிராந்தியங்கள் இருக்கமுடியுமென்றால் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ்பேசும் சமூகங்களுக்காக ஏன் இரண்டு பிராந்தியங்கள் அமையக்கூடாதா? அதில் ஒன்று முஸ்லிம் பெரும்பான்மை பிராந்தியமாக அமைவதில் உள்ள சிக்கல்கள்தான் என்ன?

- இவ்வாறு கேள்வி எழுப்புகின்றார் தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) செயலாளர் நாயகம் எம்.எச்.சேகு இஸ்ஸதீன் எம்.பி.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாய்ந்தமருதில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களினதும் தாயகமாகும். அவர்கள் ஒரு தனித்தேசிய இனம். அவர்களுக்கும் சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. இவற்றையெல்லாம் புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் முகா.தலைவர் ஹக்கீம் தட்டுத்தடுமாறித் திரிவது ஏன்? கடந்த பல வருடங்களாக முஸ்லிம் சமூகம் பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் முன்னெடுத்துவந்த தனி அலகுக் கோரிக்கையைச் சகோதரர் ஹக்கீம் கைவிட்டது மாத்திரமன்றி, வடக்கு - கிழக்கு முஸ்லிம்களைக் கவருவதற்காக தலைவர் அஷ்ரபினால் முன்வைக்கப்பட்ட வெறும் கோஷமே தென்கிழக்கு அலகுக் கோரிக்கையாகும் என்று அவர் கூறியிருக்கின்றார்.

அது எவ்வளவு முட்டாள்தனமான பேச்சு என்பதை சிந்தித்துப் பாருங்கள். அப்படியென்றால் அஷ்ரப் என்ற பெருந்தலைவர் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றிவிட்டுச் சென்றுள்ளாரா? இதற்குச் சகோதரர் ஹக்கீம் பதிலளித்தேயாகவேண்டும்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை, தேவைகளை, உணர்வுகளை, அபிலாஷைகளை எல்லாம் பல தடவைகள் திரும்பத்திரும்பச் சொல்லியும் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாத தலைவராகவே ஹக்கீம் இருந்துகொண்டிருக்கின்றார். அமைச்சர் பதவிகளுக்காகவும், பணத்திற்காகவும் மண்டியிட்டு அடிமைகளாக இருந்து அரசியல் வியாபாரம் செய்பவர்கள் இந்தச் சமூகத்திற்குத் தொடர்ந்தும் தலைவர்களாக இருக்கத்தான் வேண்டுமா?

முஸ்லிம்களின் உரிமைகளுக்காக, நாடாளுமன்ற அமர்வுகளைக்கூட பகிஷ்கரிக்க முதுகெலும்பற்ற தலைவராக இருக்கின்ற ஹக்கீமின் தலைமையில் எப்படி முஸ்லிம் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் 'செல்லமுடியும்'? மக்கள் சுழுச்சியடைந்து; களத்தில் இறங்கி தமது எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும் தெரிவிக்காதவரை முஸ்லிம் சமூகத்திற்கு விடிவுகிடைக்காது என்றார் அவர். (ம)

**நாளை**

ஐப்பசி 14
புதன்கிழமை
(30.10.2002)
திதி : நவமி
பிற்பகல் 4.13 வரை.
நட்சத்திரம் : ஆயிலியம்
பிற்பகல் 3.04 வரை.
சுபநேரம் : 4.[illegible] - 6.13
ராகுகாலம் : 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

ஒரு மனிதனின் உரையாடல் அவனுடைய எண்ணங்களின் கண்ணாடியாகும்.

# பிள்ளைகளின் கல்வி அறிவுடன் அவர்களின் ஆளுமையும் முக்கியம்

## பேராசிரியர் சிவத்தம்பி உரை

செம்பியன்பற்று,ஒக்.29

சமூகமாற்றத்தின் காரணமாக பிள்ளைகளின் எதிர்காலம் மீதான எதிர்பார்ப்புக் காரணமாக அவர்கள் மீதான திணிப்பு அதிகரிக்கின்றது. இதனால் பிள்ளைகள் தடுமாறுவதைக் காணமுடிகின்றது. பிள்ளையின் கல்வி எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு அவர்களின் ஆளுமை விருத்தியும் முக்கியமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. கரவெட்டி மாணிக்க வித்தியாலய நூற்றாண்டு விழா பரிசளிப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பேராசிரியர் இதனைத் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் ஈ.இராகவன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை, கல்விமூலம்தான் குழந்தைகளின் எதிர்காலம் தங்கியுள்ளதென்ற நிலையே உள்ளது. தமது குழந்தையும் குடும்பமும் கல்விமூலம்தான் உயர்வடையும் எனப்பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள். குழந்தைகள் சிறந்த கல்வியைப் பெறப் பெற்றோர்கள் வழிவகுகின்றார்கள். கல்வியின் மூலம்தான் எதிர்காலத்தைத் திட்டமிடுகிறார்கள். அவ்வாறு செய்யும்போது அதிலுள்ள பாதகமான அம்சங்களை மிக ஆழமாக அவதானிக்க வேண்டும்.

எத்தகைய கல்வி, எத்தகைய கல்வி புகட்டல் தமது பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணரும் என்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்தவேண்டும். இல்லையேல் தமது பிள்ளைகள் கல்வியில் எவ்வளவு தூரம் முன்னேறவேண்டும் என்று பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றார்களோ அந்த எதிர்பார்ப்பு ஏமாற்றமாகவே மாறும். அந்தநிலையில் பெற்றோர்கள் அப்பிள்ளைகள் அந்நியப்படுத்தப்படுகிறார்கள். தமது பெற்றோர்கள் தம்மை நடத்தும் விதத்தில் சந்தேகப்படுகிறார்கள்; கவலைப்படுகிறார்கள். எமது எதிர்பார்ப்பிற்கு மாறாகக் கருமம் நடைபெறும். ஆளுமைவிருத்தி முக்கியம். இதில் கவனம் செலுத்தப்படவேண்டும். அதிலும் பெற்றோர் - பிள்ளை உறவு மிக மிக முக்கியம். பிள்ளைகள் இப்போது நாம் எதிர்நோக்குவதை விட எதிர்காலத்தில் அதிக சிரமங்களை எதிர்நோக்குவர். இப்பிள்ளைகளுக்கு நாம் வழங்கும் பயிற்சி பற்றி மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

தமிழினத்திற்கு அழியாச் சொத்தாகவுள்ளது கல்வியே. கல்வியிலே தான் குழந்தையின் எதிர்காலம் தங்கியுள்ளது. குழந்தை சிறந்த கல்வியைப் பெறுவதற்கு பெற்றோர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஆளுமை விருத்தியும் முக்கியம் ஆகும் - என்றார். (ம-36)

# நாகர்கோவில் மீள்குடியேற்றம்பற்றி யாழ்.செயலகத்தில் இன்று கூட்டம்

### உசனில் நடந்த கூட்டத்தில் முடிவில்லை

செம்பியன்பற்று,ஒக்.29

நாகர்கோவில் கிழக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக இன்று யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் முக்கியமாக ஆராயப் படவுள்ளது.

இந்தக் கூட்டத்தின் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை மற்றும் அப்பகுதிக் கிராம அலுவலர்கள் முக்கியமாகக் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப் பட்டது.

நாகர்கோயில் கிழக்கில் மீளக் குடியமர்வு தொடர்பாக 523ஆவது பிரிகேட் அதிகாரி தலைமையில் உசன் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன் தினம் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மீளக்குடியமர்வு தொடர்பான எந்த முடிவும் எடுக்கப் படவில்லை.

அதனை அடுத்தே இன்றைய செயலகக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் மூன்று முக்கிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

☆ நாகர் கோவில் கிழக்கு, மேற்கு, தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர முடியாதவாறு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் அகற்ற வேண்டும்.

☆ கண்ணிகள் அகற்றப்படும்வரையான காலப்பகுதியில் இப்பகுதி மக்களை கண்ணிகள் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து 400 மீற்றர் மேற்குப் புறமாக தற்காலிகக் குடிசைகளை அமைத்து மீளக்குடியமர்த்த வேண்டும்.

☆ இப்பகுதி மக்கள் தமது சொந்த வீடுகளை நேரில் சென்று பார்ப்பதற்கு ஒருவார காலத்துக்குள் அனுமதி வழங்கப்படவேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகளுமே முன்வைக்கப்பட்டன. (ம-36)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.29

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா இன்று பிப. 3மணிக்கு வித்தியாலய பொன் ஜத்துரை அரங்கில் முதல்வர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் சி.சிவராம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன நிறைவேற்று அதிகாரி திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-10)

★ ★ ★

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் ஜெயரத்தினம் நினைவு தினமும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்சங்க கொழும்புக்கிளையின் தலைவர் இ.கிருபானந்தன் பிரதமவிருந்தினராகவும் தெல்லிப்பழைக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன், கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். ஜெயரத்தினம் நினைவுப் பேருரையை செல்வி ஜெயரஞ்சினி ராசதுரை நிகழ்த்துவார். (ம-152)


யாழ்.மாவட்ட ஆளுநர்
அவர்களின்
(மாவட்டம் 306B)

**உத்தியோகபூர்வ விஜயம்**

மாவட்டம் 306B - பிராந்தியம் IX வலயம் 2

இடம்: யாழ்.ப.நோ.கூ.ச. மண்டபம்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: இன்று [29.10.2002] செவ்வாய்க்கிழமை
மாலை 6.00மணி

எமது மாவட்ட ஆளுநர்
லயன் ஒறிகன் பிங்ளே MJF JP அவர்கள்
லயன் சீமாட்டி டாக்டர் திருமதி றேபேக்கா சகிதம்
லயன் பொலிபஸ், லயன் சீமாட்டி
(லயன் மாவட்ட செயலர்) அவர்களுடனும்
பிராந்தியம் IX, வலயம் 2இன் கழகங்களுக்கு
உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்கிறார்.

இந்த நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர்கள், பிராந்திய இணைப்பாளர்கள், பிராந்தியத் தலைவர்கள், வலயத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வலயத் தலைவர்
வலயம் 2, பிராந்தியம் IX.

தலைவர்கள்
நல்லூர், உரும்பிராய், வடமராட்சி, சுன்னாகம்
லயன்ஸ் கழகங்கள். (9992)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

உதயம் 22 - 06 - 1945



அஸ்தமனம் 29 - 09 - 2002

**திருமதி சுந்தரலிங்கம் பஞ்சரதம் (லீலா)**

உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உணர்வால் எம்மோடு வாழும் இதயத் தெய்வமே!
நீர் பிரிந்து முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
உம் நினைவலைகள் என்றும் ஆறாது.

*கடந்த 29.09.2002இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்காகத் திகழ்ந்த திருமதி சுந்தரலிங்கம் பஞ்சரதம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் ... மணிக்கு நடைபெறவுள்ளன.*

*ஆகவே, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து வீட்டில் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*74/1, காரைக்காட்டு லேன்;*
*வண்ணார்பண்ணை. (9778)*

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



# PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்




- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடியதாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த தாழ்வான ஓசை.
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

TV சென்டர் Pvt.Ltd.
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல் : 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.



பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை

**முக்கிய அறிவித்தல்**

30.09.2002இல் முடிவுறுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பைக் காட்சிப்படுத்தல்

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத்தின் கிளைகள் ரீதியாக முழுப்பங்கினைச் செலுத்தி வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் பட்டியல்கள் தற்போது இயங்கும் சங்கத்தின் எல்லாக் கிளைகளிலும் (வலிகாமம், வடமராட்சி உட்பட) இன்று (29.10.2002) செவ்வாய்க்கிழமையிலிருந்து எதிர்வரும் 08.11.2002 (வெள்ளிக்கிழமை) வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. காட்சிப் படுத்தப்பட்ட பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் அல்லது பெயரிலோ, முகவரியிலோ பிழை உள்ளவர்கள் பங்குப் பணத் தொகையில் அல்லது வேறு விதத்தில் திருத்தங்கள் செய்யப் படவேண்டியிருப்பின் அதுபற்றிய ஆட்சேபனையை 09.11.2002ஆம் திகதிக்கு முன் சங்கச் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும். இவ்வாக்காளர் பட்டியலுக்கமைவாகவே கிளைக்குழுத் தேர்வு நடைபெறும்.

- செயலாளர்.

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.
*29.10.2002* (சி-24519)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 24 - 04 - 1905



மறைவு 08 - 11 - 2001

**திருமதி கனகசபை தங்கமுத்து**

திதி: 29-10-2002 அபரபக்க அட்டமி

காலமெல்லாம் எம்முடன் வாழ்ந்து
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*மணியகாரன் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.* (9984)

- குடும்பத்தினர்.



**ஏழாம் ஆண்டு நினைவுகளில்...**

குவலயத்தில் 15 - 06 - 1929



குகமயத்தில் 29 - 10 - 1995

**அமரர் ஸ்ரீமான் ஷண்முகரத்நம் குமரேசன்**

(முன்னாள் விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்).

திதி: கந்தஷஷ்டி

சிந்தனைக்குரிய சேவை சீர்பெறச் செய்த மேலோன்
வந்தனைக்குரிய வாழ்வு வாழ்ந்துநீர் சென்றீர் அன்று
எந்தையே உமைப் பிரிந்து ஏழாண்டு காலமாச்சே!
வந்தனை செய்வோம் உம்மை வாழ்த்தியே வணங்குகின்றோம்.

*மணியகாரன் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

மனைவி, மக்கள்.
(C/24508)

# பிறந்தது ஒல்லாந்தில்; பயிற்சி அமெரிக்காவில் மிதிவெடிகளை அகற்றியது சரசாலையில்!

**மாற்றார் தோட்டத்திலிருந்து...**

**குடாநாட்டில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள மோப்ப நாய்கள் குறித்து விவரிக்கிறது இக்கட்டுரை.**

யாழ்.குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டவை அமெரிக்காவில் பயிற்சி பெற்ற நாய்கள். அமெரிக்காவிலுள்ள றொங்கோ குளோபல் (RONCO GLOBAL) என்னும் கணணிவெடிகளை அகற்றும் நிறுவனம் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டது.

கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி இரு அமெரிக்க அதிகாரிகளும், 24 மொசாமபிக் நாட்டைச் சேர்ந்தவர்களும், கண்ணிவெடிகளைக் கண்டறியும் 4 மோப்ப நாய்களும் யாழ்ப்பாணம் வந்தனர்.

ஒல்லாந்து நாட்டில் பிறந்த இந்த நாய்கள் ஜேர்மன் செபேர்ட் இனத்தைச் சேர்ந்தவை. பிறெட், பாக், எடி மற்றும் மக்ஸ் என்ற பெயர்களைக் கொண்ட இந்த 4 நாய்களும் சரசாலைப் பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டன.

கண்ணிவெடிகளைத் தேடி மோப்பமிடும் இந்த நாய்களின் சேவையைப் பெறுவதற்கு கண்ணிவெடி அகற்றும் பல பணியாளர்களின் சேவையும் தேவைப்படுகிறது.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிமனைகள் இந்த நாய்களை சங்கிலியால் பிணைத்து கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடத்திற்கு அழைத்துச் செல்வார்கள். நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளன எனச் சந்தேகிக்கப்படும் இடங்கள் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கும். கண்ணிகள் அகற்றப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் கண்ணிகள் அகற்றப்படாத பகுதிகள் ஆகியவற்றை இலகுவில் கண்டறிவதற்காகவே பகுதிபகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கண்ணிவெடிகள் இருக்கக்கூடும் என்ற பகுதியைச் சுற்றிய பகுதிகளில் முதலில் கண்ணிவெடிகள் அற்ற பாதுகாப்பு வலயம் உருவாக்கப்படும்.

இந்தப் பாதுகாப்பு வலயத்திற்குள் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் நின்றவாறு சங்கிலியைப் பிடித்தவாறே மோப்ப நாய்களை பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலப் பரப்பிற்குள் அனுப்புகின்றனர்.



இந்த நாய்கள் நிலத்தை மோப்பமிடுகின்றன. அதன் மூலம் கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள சரியான இடத்தை இந்த நாய்கள் எஜமானுக்குத் தெரிவிக்கின்றன. பணியாள்கள் பாதுகாப்பாகச் சென்று புதைக்கப்பட்ட அந்தக் கண்ணிவெடியை நிலத்தில் இருந்து அகற்றிச் செயலிழக்கச் செய்கின்றனர். அதேநேரம் மற்றுமொரு கடமையை நிறைவேற்ற வேணடியுள்ளது. அதாவது கண்ணிவெடியைக் கண்டறிந்த அந்த நாய்க்கு "ஊக்குவிப்பு உணவு" வழங்கப்படும்.

கண்ணிவெடிகளைத் தேடும் பணியில் இந்த நாய்களை ஈடுபடுத்துவதற்காக வழங்கப்படும் இந்த உணவு சாதாரண உணவு அல்ல. மிகவும் போஷாக்கு மிக்கவை. நாய்களின் மொத்தநிறை 25கிலோவைத் தாண்டாத விதத்தில் இந்த உணவு வழங்கப்படுகிறது. நாளொன்றுக்கு, 200 கிறாம் உணவே இவ்வாறு வழங்கப்படுகிறது. இந்த உணவில் இறைச்சியோ அல்லது எண்ணெய்யோ இருக்காது. இருப்பினும், வேண்டியளவு தண்ணீர் நாய்களுக்கு வழங்கப்படும். மிதிவெடிகளை மிதிக்க நேர்ந்தால் அந்த மிதிவெடிகள் வெடிததுவிடும் வாய்ப்பைக் குறைப்பதற்காகவே நாய்களின எடை கட்டுப்படுத்தப்படுகிறது.

நாய்களின் உடல்நிலைக்குப் பொருத்தமான - அதேநேரம் அவற்றின் நிறையை எப்போதும் சமநிலையில் வைத்திருக்கக் கூடிய - நாய் உணவு வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. அவற்றிற்கான மருந்து வகைகளும் வெளி நாட்டில் இருந்தே கொண்டுவரப்பட்டுள்ளன. உணவு மற்றும் மருந்துக்கென மாதம் ஒன்றுக்கு ஒரு நாய்க்கு 20ஆயிரம் ரூபா செலவாகிறது. நாய்களின் ரோமங்களை வெட்டுவது அவற்றின் பற்களைத் துலக்குவது போன்றவற்றிற்கு ஆகும் செலவு தனியாகும். இந்தப் பணிகளை கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களே மேற்கொள்கின்றனர்.



கண்ணிவெடிகளை அகற்றும் ஒரு குழுவிற்கு குறைந்தது 2நாய்களின் சேவை தேவைப்படுகின்றது. ஒரு நாய் கண்ணிவெடிகளைத் தேடும் பணியை முடித்தவுடன் குறிப்பிட்ட அந்த இடத்தில் வேறு கண்ணிவெடிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய 2அவது நாய் ஈடுபடுத்தப்படுகிறது.

**தமிழில்: கஜனி**

நாய்களால் மேற்கொள்ளப்படும் இந்த இரட்டைச் சோதனையின் (DOBLE CHECK) பின்னரே அந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் இல்லை என உறுதிப்படுத்தப்படுகிறது.

கண்ணிவெடிகளைக் கண்டறியும் பணிக்கு நாய்க ளைப் பழக்குவது மிகவும் பாதுகாப் புடனும், ஒழுங்கு முறை யுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும். இங்கு பணியில் ஈடுபட்ட நாய்களுக்கு அமெரிக்காவிலுள்ள டெக்சஸ் மாநிலத்திலுள்ள குளோபல் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தக் கழகத்தில் நாய்களுககு மோப்பத்தின்மூலம் கண்ணிவெடிகளைக் கண்டறியும் பயிற்சி வழங் கப்படுகிறது.

கண்ணிவெடிகள் எத்தகையன ஆயினும் அவை 'டைனமெட்' அல்லது 'ரி.என்.ரி' எனப்படும் வெடிபொருள் அல்லது 'சி - 4' எனப்படும் பிளாஸ்டிக் வெடிமருந்து ஆகியனவற்றைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்றன. முதலில் இந்த நாய்களுக்கு இந்த வெடிமருநதுகளை மோப்பத்தின்மூலம் கண்டறியும் பயிற்சி வழங்கப்படுகிறது. அதன் பினனர் கண்ணிவெடிகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கம்பிகள், உலோகங்கள் ஆகியனவற்றைக் கண்டறிவது தொடர்பான பயிற்சி வழங்கப்படுகிறது.

நிலக்கண்ணிகள் நிலமட்டத்திலிருந்து 10-30 சென்ரிமீற்றர்களுக்கு இடையான ஆழத்தில் புதைக்கப்படுகின்றன. நிலத்தின்கீழ் புதைக்கப்பட்டாலும் இந்த கண்ணி வெடிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிபொருளின் வாசனை நில மட்டத்திற்கு வருகிறது. மோப்பம் பிடிப்பதில் மனிதர்களை விட நாய்கள் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தவை. எனவே, கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டறிவதில் இந்த நாய்கள் திறமையாகச் செயற்படுகின்றன.

கண்ணிவெடிகளைக் கண்டறியும் பயிற்சியில் ஈடுபடும் நாய்களின் வயது 18 மாதங்களுக்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும். இந்த நாய்களுக்கு மனிதர்களுக்கு கீழ்ப்படியும் பயிற்சியையே பயிற்சியாளர்கள் முதலில் வழங்குகின்றனர்.

அதன் பின்னர் தனித்தனியான இடங்களில் மறைத்துவைக்கப்படும் வெடிபொருள்கள் அடங்கிய பொதிகளைக் கண்டறியும் பயிற்சி நாய்களுக்கு வழங்கப்படுகின்றது. பயிற்சியில் இறுதிக் கட்டத்திலேயே நிஜ நிலக்கண்ணிவெடிகளைக் கண்டறியும் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்தப் பயிற்சிகள் முடிவடைந்தாலும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியாளர்கள் இந்த நாய்களின் செயற்பாடுகளை சுமார் 10 வாரங்கள் அவதானிப்பார்கள். அதன் பின்னரும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களுக்கு அந்த நாய்களைக் கொண்டு செல்லுமுன்னர் மேலும் 2 வாரங்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த நாய்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்போது நாய்கள் குட்டிகளாக இருந்தபோது அதன் உரிமையாளர்கள் பயன்படுத்திய செல்லமொழியிலேயே பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அமெரிக்காவில் பயிற்சி பெற்றுப் பின்னர் யாழ்ப்பாணம் வந்த நான்கு நாய்களும் ஒல்லாந்தில் பிறந்தவையாகும். எனவே, இந்த நாய்களுக்கு ஒல்லாந்து நாட்டவர்களே பயிற்சி அளித்துள்ளனர். எனவேதான் யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள மொசாம்பிக் நாட்டவர்கள் இந்த நாய்களுக்கு ஒல்லாந்து மொழியான 'டச்' மொழியில் கட்டளைகளை வழங்குகின்றனர்.

ஒரு நாய் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட சுமார் 14 வாரப் பயிற்சிகளைப் பெறுகிறது. இந்தப் பயிற்சிகளின் பின்னர் தொழில் ரீதியாகப் பணியாற்றும் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

அவற்றிற்கும் வெளிநாட்டு விஜயங்களுக்கான அழைப்புகள் விடுக்கப்படுகின்றன. புதிய மதிப்பையும் பெறுகின்றன. இத்தகைய நாய் ஒன்றின் விலை சுமார் 15 லட்சத்தில் இருந்து 20 லட்சம் ரூபாவாகும்.

ஒரு நாளில் ஏழு அல்லது எட்டு பணியாளர்கள் செய்துமுடிக்கும் பணியை இந்த மோப்ப நாய் ஒரே நாளில் செய்துமுடித்துவிடும்.

கண்ணிவெடிகளைத் தேடும் பணியில் ஈடுபடும் இந்த நாய்கள் தமது இலக்கைத் தவறவிடுவது அரிதிலும் அரிதாகும். தற்போது உலகில் சுமார் 400 மோப்ப நாய்கள் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், கடந்த 14 வருடங்களில் கண்ணிவெடியில் சிக்கிப் பலியான நாய்களின் எண்ணிக்கை பத்து மட்டுமே.

கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாள்களுடன் ஒப்பிடுகையில் இந்த நாய்களின் தேர்ச்சியும் துரிதமும் மேலோங்கியே உள்ளன.

சாதாரணமாக 5 ஆயிரம் கண்ணி

(8ஆம் பக்கம் பார்க்க)

# கல்விச்சாலைக் காட்சிகள்



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விஜயதசமி விழாவில் தரம் 2ஆம் வகுப்பு மாணவர்கள் 'சக்தி வழிபாடு' என்னும் தலைப்பில் வில்லிசை நிகழ்த்தியபோது எடுக்கப்பட்ட படம் இது. (எ-11)



வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை முன்பள்ளி சிறார்களின் சிறுவர்தின நிகழ்வும், ஆசிரியர்தின நிகழ்வும் அண்மையில் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நடைபெற்றன.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்தந்தை ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகளார் பாலர் பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவினரால் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (எ-5)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் தமிழ்விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றபோது விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க. அருந்தாகரன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

அருகில் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன், கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும், தமிழ்ச் சங்கக் காப்பாளருமான இமா.சிவசுப்பிரமணியம், சங்கத் தலைவர் நி.நிறஞ்சன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



இந்திய மற்றும் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தனர்.

இந்திய இராமகிருஷ்ண மிஷன் அதிபர் தவத்திரு. சுவாமி ஆத்மபிரியானந்தர், இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தவத்திரு. ஆத்மகணானந்தர், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சித்ருபானந்தா ஆகியோர் அரங்கில் காணப்படுகின்றனர். பாடசாலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவதைப் படத்திற் காணலாம். (எ-73)

# இதய அஞ்சலிகள்

இந்தியாவில் காலமாகிய வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் பரம்பரை உரிமையாளரும் தர்மகர்த்தாவும் முகாமையாளருமாகிய

**வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பச்செட்டியார்**

அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள். அன்னாரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினரின் துயரைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
தி.ஜெயராசா குடும்பத்தினர்.
63, B.A தம்பிலேன், யாழ்ப்பாணம்.

*235, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10005)

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் மலர்வு | விண்ணில் சங்கமம் |
|---|---|
| 09 - 06 - 1934 | 29 - 10 - 1992 |

அமரர்

**A.கொன்ஸ்ரன்ரைன் பீரிஸ** *(C.T.B., D.I.)*

*எம் அன்பின் திருவுருவாய்*
*பண்பின் சிகரமாய்*
*எம் வாழ்வின் வழிகாட்டியாய்*
*பாசத்தின் பரம்பொருளாய்*
*நாட்டின் நற்பிரஜைகளாய்*
*எம்மை வளர்த்து*
*ஆளாக்கிய தந்தையே!*
*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து*
*ஆண்டுகள் பத்தாகியும் உங்கள்*
*நினைவுகளை மறக்க முடியவில்லை.*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மாமி.

*15/1, டேவிட் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10002)

# பரிசுபெற்றோர் காசோலைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஒக்.29

தொழில்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட "மாகாணக் கைத்தொழில கண்காட்சி"யில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசிற்குரிய காசோலைகள் யாழ்ப்பாணம் தொழில்துறைத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன என்று தொழில்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெற்றி பெற்றோர் பெயர் விவரம் வருமாறு:-

எம்.ஜெயா (500 ரூபா), பி.ரஞ்சினி (ஆயிரத்து 250 ரூபா), எஸ்.பரம்பொருள் (ஆயிரத்து 750ரூபா), எம்.செல்வமலர் (500ரூபா), கே.கருணாகரன் (ஆயிரத்து 250ரூபா), ப.திருக்கேதீஸ்வரி (ஆயிரம் ரூபா), பி.வதனி (750ரூபா).

மேற்படி பரிசிற் தொகைக்குரியவர்கள் தமக்குரிய காசோலைகளை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ்.மாவட்ட தொழில்துறை திணைக்களத்தின் அலுவலர் தெரிவித்துள்ளார். (ம-8)

# பிறந்தது...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிகளை அகற்றும்போது ஒரு பணியாள் பலியாகிறார். ஆனால், கடந்த 14 ஆண்டுகளில் லட்சக் கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டபோதிலும் பலியான நாய்களின் எண்ணிக்கை 10 மட்டுமே.

உலகில் பல்வேறு நாடுகளில் 70 லட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது. இருப்பினும், பயிற்சிபெற்ற நாய்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் அவற்றிற்குப் பெரும் பணிகள் காத்திருக்கின்றன. ☆

# மாநகராட்சி பெயர்ப் பலகையில் உள்ள பெயரை மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.மாநகரசபை அலுவலகத்தின் பிரதான வாயிலுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அலுவலகப் பெயர்ப பலகையிலுள்ள வாசகங்களில் மாற்றம் செய்யவேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாநகரசபையின் கடிதத் தலைப்புகள், கோவைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள் ஆகியவற்றில் மாநகராட்சி மன்றம் என்னும் சொற்பதமே பாவிக்கப்பட்டு வருவதாகவும் ஆனால், பெயர்ப்பலகையில் மாத்திரம் கடந்த பல வருடங்களாக மாநகரசபை என்ற சொற்பதமே பாவிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்த உறுப்பினர்கள், இந்த விடயம் தொடர்பாக சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதனை மாற்றுவதற்கான முடிவு எடுக்கப்பட்டபோதும் இதுவரையும் மாற்றப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, உடனடியாக மாநகரசபை என்ற சொற்பதத்தை மாற்றி மாநகராட்சி மன்றம் என்னும் சொற்பதத்தை பெயர்ப்பலகையில் இட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-10-5)

# விளக்க மறியல் நீடிப்பு

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கின் சந்தேகநபர்கள் இருவரையும் அடுத்த மாதம் 11ஆம் திகதி வரையும தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இவர்கள் இருவரும் மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டிருந்தார். இதன்படி நேற்று இருவரும் மன்றில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து இருவரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-10)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவியும் கல்லூரியில் 25 வருடங்கள் நல்லாசிரியராகக் கடமையாற்றி பல கல்விமான்களை உருவாக்கி ஓய்வுபெற்ற பின்னரும் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்காக அரும்பணியாற்றிய

**அமரர் அன்னலட்சுமி சின்னராசா**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு கல்லூரிச் சமூகம் அதிர்ச்சி அடைந்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்கள்.

*யா/இணுவில் இந்துக் கல்லூரி* (10017)

# முதலாம் வருட நினைவுநாள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 - 12 - 1945 | 08 - 11 - 2001 |

**திருமதி சிவஞானம் இராசம்மா**

ஆதரவுகள் ஆயிரம் வரலாம்
அம்மா! உன் அன்புபோல் வருமா?

இன்று (29. 10. 2002) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஓராண்டு அஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:*
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

*"ரதிபா பந்தல் சேவை"*
*கைதடி மத்தி,*
*ஆவரம்பள்ளம்.* (10012)

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை இராசரட்ணம்

*(முன்னாள் கிளை முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம், யாழ்ப்பாணம்)*

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும், தற்போது வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இராசரட்ணம் நேற்றுமுன்தினம் (27.10.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சுந்தரத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் (நாவற்குழி) மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் குருபரன் (கனடா), சுகந்தினி (கொழும்பு), குணபரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவனேசன், சுஜித்தா ஆகியோரின் மாமனாரும் தேவந்தியின் அன்புத் தாத்தாவும் கனகரட்ணம், ஆனந்தராஜா (MOH, மல்லாவி), சரஸ்வதி, காலஞ்சென்ற சிறீகாந்தன் மற்றும் தயாபரன் தில்லைநாதன் (கொழும்பு), பானுமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சுதாகரன் (கனடா), மயூரணி (மட்டக்களப்பு - பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெரியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.கனகரட்ணம், ம.தயாபரன்
(மைத்துனர்மார்கள்)

*12/2, சப்பல் லேன்,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு.* (10013)


## யாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஓர் உன்னத ஆயுர்வேதத் தயாரிப்பு.




க்ராக் க்ரீம்



'க்ராக் க்ரீம்" வலி, எரிச்சல் இரத்தக்கசிவு, வீக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து இழந்த ஈரத்தை மீட்டு வெடிப்புக்களை நிரப்புகிறது. இதன் சிறப்பு ஆயுர்வேத EH formula எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் 14லே நாட்களில் வெடிப்புக்களை நிரப்பி பாதங்களை அழகுபடுத்துகிறது. தொடர்ந்து பாவிப்பதன் மூலம் திரும்பத் திரும்ப வருவதை தடுக்கலாம்.

PHARMCO MARKETING SERVICES (PVT) LTD

ஏக விநியோகஸ்தர்:- JEGHAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel.021-2194, 3191

## 21ஆம் நூற்றாண்டின் புதிய களைநாசினி

# 'ரச்டவுன்'

தோட்டங்களிலும், தரிசு நிலங்களிலும் கோரை, அறுகு, பாதீனியம் களைகளை ஒரே தடவையில் முற்றாக அழிக்கப் பாவியுங்கள்!

CICஇன் அதி விசேட தயாரிப்பு

'ரச்டவுன்'
(களை நாசினியை)

*மற்ற எந்த களைநாசினியிலும் இல்லாத இதன் சிறப்புத்தன்மை.*

- ✻ இதில் கிளைபோசேற்றுடன் றைமேசியம் என்ற இரசாயனம் கலந்து இருப்பதனால், களைகளின் வேர்களை, கிழங்குகளை சிறந்தமுறையில் ஊடுருவித் தாக்கி முற்றாக அழிக்கின்றது.
- ✻ களைநாசினி தெளித்து 10 - 12 நாள்களுக்குள் களைகளை முற்றாகக் கட்டுப்படுத்தும் தன்மை.
- ✻ மழையினால் பாதிப்படையாது.
- ✻ பயிர் செய்யும் மண்ணுக்கு ஒருவித பாதிப்பும் இல்லை. [200 மி.லீ. (8அவு.) ரச்டவுன் களைநாசினி 16 லீற்றர் (31/2) கலன் நீரில் கலக்கவும்]

*எல்லா விவசாய மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்*

ஏக விநியோகஸ்தர்:
**பவானி களஞ்சியம்**
*இராச வீதி, நீர்வேலி.*

CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
*199, கியூ வீதி, கொழும்பு - 02* (10007)



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதி வழங்கும் வைபவத்திலே கந்த முருகேசனார் ஞாபகார்த்த நடவடிக்கைக் குழுத் தலைவர் வீ.எஸ்.ஏகாம்பரநாதன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸிடம் நிதியைக் கையளிப்பதையும், பல்லைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், தமிழ்த்துறை விரிவுரையாளர் என்.சிவலிங்கராசா ஆகியோருடன் கந்த முருகேசனார் ஞாபகார்த்த நடவடிக்கைக் குழு உறுப்பினர்களையும் படத்தில் காணலாம். *(படம்:வடமராட்சி செய்தியாளர்)*

### மத்திய கல்லூரியின்

# 'றொமெயின் குக்' மண்டப புனரமைப்புக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 'றொமெயின் குக்' மண்டபத்தைப் புனரமைக்க கல்வி அமைச்சு 45 லட்சம் ரூபாவை உடனடியாக ஒதுக்கியுள்ளதாகக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

நீண்டகாலப் பழைமை வாய்ந்த இக்கட்டடம் கல்லூரியின் மிக புகழ் பூத்த கல்லூரி நூலகமாக இயங்கி வந்தது.

1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட அதே நாள் இந்நூலகத்துப் புத்தகங்களும் எரிக்கப்பட்டன.

மத்திய கல்லூரியின் 180ஆவது ஆண்டு நிறைவுதினத்தையொட்டி 1996ஆம் ஆண்டு இக்கட்டடத்தின் முன்னைய தோற்றத்தைக் கொண்ட படம் தபால் திணைக்களத்தால் முத்திரையாக வெளியிடப்பட்டது. (ம)

### பால்மா தொடர்பான குளறுபடியால்

# நிவாரணம் வழங்குவதில் சங்கானை சங்கத்தில் இழுபறி

சண்டிலிப்பாய்,ஒக்.29

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 107ஆம் இலக்க ஏ.பி. முத்திரைக்குரிய இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணத்தை உரிய காலத்தில் விநியோகம் செய்யமுடியாதிருப்பதாக அச்சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்செயலக புன்வாழ்வுப் பகுதியில் பால்மா பக்கெட்டுகள் ஒதுக்கப்பட்டது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்களே நிவாரணத்தை வழங்கமுடியாத நிலையை ஏற்படுத்தி இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-9-135)

# வாய் பேசமுடியாத நபரை தாக்கி காயப்படுத்திய கும்பல்

இணுவில்,ஒக்.29

கோண்டாவில் வடக்கில் வாய் பேசமுடியாத நபர் ஒருவரை இனந்தெரியாத சிலர் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் அவர் காயமடைந்தார்.

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த குணசிங்கம் நிமலன் (வயது 29) என்பவரே காயமடைந்தவர் ஆவார், கடந்த சனியன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் வேலைமுடிந்து வீடு நோக்கிச் செல்கையில் அவரை வழிமறித்த சிலர் கண்டபடி தாக்கி விட்டு வீதியின் ஓரத்தில் இருந்த மணல் கும்பியில் சைக்கிளுடன் தூக்கிப்போட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும்-

சம்பவம் நடந்து சிறிது நேரத்தின் பின்னர் அவ்வழியால் பயணித்தவர்கள், காயமடைந்தவரின் முனகல் சத்தம் கேட்டு அவரை அவரது வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர் என்றும் - கூறப்பட்டது.

அதன் பின்னர் 25இற்கு மேற்பட்ட இளைஞர்கள் சிலர் வாய் பேசமுடியாதவருக்கு ஆதரவாகத் திரண்டு அவரைத் தாக்கியவர்கள் என்ற சந்தேகத்தில் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள வீட்டாருடன் வாக்கு வாதப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி)

# மாணவியை கடத்த முயன்ற கும்பலை தட்டிக் கேட்டவருக்கு வாள்வெட்டு!

## உடுப்பிட்டியில் இரவுவேளை சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

உடுப்பிட்டிப் பகுதியில் மாணவி ஒருவரைக் கடத்த முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட குழுவினரைத் தட்டிக்கேட்ட ஒருவர் பின்னர் அந்தக் குழுவினரால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு உடுப்பிட்டிச் சந்தைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தியோடை என்ற முகவரியில் வசிக்கும் க.இரமணன் (வயது 28) என்ற நபரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

இதனால் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிவரையும் உடுப்பிட்டிப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் கூறப்பட்டதாவது:-

தனியார் கல்வி நிறுவனம் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி ஒருவரை இளைஞர் குழு ஒன்று கடத்த முயன்றுள்ளது. உடுப்பிட்டிச் சந்தைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டி ஒன்றே இந்தச் செயலில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

அவர்களின் பிடியில் இருந்து தப்பிய மாணவி அருகில் இருந்த தனது உறவினர் ஒருவரிடம் அது குறித்து முறையிட்டார். உடனடியாகச் செயற்பட்ட உறவினரும் அவருடன் இணைந்த அப்பகுதியைச் சேர்ந்த வேறு சிலரும் சம்பந்தப்பட்ட இளைஞர் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரை மடக்கிப் பிடித்தனர். அவரை அந்த மாணவியிடம் மன்னிப்புக் கேட்க வைத்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த இளைஞர் கோஷ்டி மாணவியிடம் மன்னிப்புக் கேட்க வைத்த குழுவினருடன் பின்னர் வாக்குவாதத்தில் ஈடுபட்டது. அப்போது தயாராக வைத்திருந்த வாளால் அவர்களில் ஒருவரை வெட்டியது அந்தக் கும்பல்.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் வெட்டியவர்களுக்கு எதிராக ஒன்றுதிரண்டு கிளர்ந்து எழுந்தனர். வெட்டியவர்களைத் தேடி அவர்களின் வீடுகளுக்கும் சென்றனர். அங்கு அவர்கள் இல்லை. அதனால தமது ஆத்திரத்தை வீட்டு உடைமைகள் மீது காட்டினர் பொதுமக்கள்.

உடனடியாக அப்பகுதிக்கு வந்த வல்வெட்டித்துறைப் பொலீஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர், அத்துடன் சம்பந்தப்பட்ட இளைஞர் கோஷ்டியை தாம் கைதுசெய்வதாகவும் உறுதி வழங்கினர். இந்தச் சம்பவங்கள் குறித்து வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்திலும் விடுதலைப் புலிகளின் அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-5)

# சித்தசுவாதீனமற்றவரை தாக்கிய இளைஞர்கள்

## கொடிகாமத்தில் சம்பவம்

கொடிகாமம்,ஒக்.29

கொடிகாமம் சந்தியில் நின்ற ஒருவரை இளைஞர்கள் சிலர் கடுமையாகத் தாக்கிவிட்டு அவரது ஆடைகளைக் களைந்து அரைகுறை ஆடைகளுடன் விட்ட சம்பவம் ஒன்று கடந்த வெள்ளியன்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தாக்கப்பட்டவர் ஒரு சித்தசுவாதீனமற்ற நபர் என்று அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொடிகாமம் பஸ் நிலையப் பகுதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி இருந்த இளைஞர் ஒருவர் அதனை எடுக்கும்போது அருகே நின்றிருந்த குறிப்பிட்ட சித்தசுவாதீனமற்ற நபர் நிலைதடுமாறி மோட்டார் சைக்கிள் மீது வீழ்ந்துள்ளார்.

இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் குழு அந்த நபரை "ஏன் மோட்டார் சைக்கிளைத் தள்ளி விழுத்தினாய்" என்று கேட்டு மிரட்டியதுடன் மூர்க்கத்தனமாக அவரைத் தாக்கியுள்ளது. பின்னர் அவரது மேலாடைகளைக் களைந்து எறிந்துள்ளது. பின்னர் அந்த இளைஞர் குழு குறிப்பிட்ட நபரை வேறோர் இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளது.

அதேசமயம் -

கொடிகாமம் நகரப் பகுதியில் மாலை நேரங்களில் இளைஞர்கள் சிலர் மதுபோதையில் இவ்வாறான அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-74)

## சட்டவிரோதமாக மாடு வெட்டிய இருவர் கைது!

இளவாலை,ஒக்.29

சட்டவிரோதமாக மாடு வெட்டிய இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் இளவாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரவு நேரம் சட்டவிரோதமாக மாடு வெட்டப்பட்டு இறைச்சி விநியோகிக்கப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு விரைந்த பொலீஸார் அவர்களைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து இறைச்சி வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கத்திகளையும் கைப்பற்றினர். (ம-48)

# பருத்தித்துறை பிரதேச சபையை இரண்டாகப் பிரிக்கக் கோரிக்கை

செம்பியன்பற்று,ஒக்.29

பருத்தித்துறை பிரதேச சபையை இரண்டாகப் பிரிக்குமாறு மாகாண உள்ளூராட்சி அமைச்சரிடமும் வடக்கு-கிழக்கு ஆளுநரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பகுதியையும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றையும் இணைத்தே தற்போது பருத்தித்துறை பிரதேச சபை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பிரதேச சபையை இயக்குவதில் பெரும் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனை அடுத்து, பருத்தித்துறை பிரதேச சபையை வடமராட்சி வடக்கு பிரதேச சபை மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச சபை என இரண்டு பிரதேச சபைகளாகப் பிரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் பருத்தித்துறை பிரதேச சபை இரண்டாகப் பிரிக்கவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கோரிக்கை தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பருத்தித்துறை பிரதேச சபையை இரண்டாகப் பிரிக்குமாறு 1999ஆம் ஆண்டே மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சிடம் பருத்தித்துறை பிரதேச சபை கோரிக்கை விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-36)

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவருக்கு!

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கின்ற பகல், மாலை நேர சகல கற்கைநெறி மாணவர்கள் அனைவரையும் நாளை காலை 9.00 மணிக்கு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஒன்றுகூடுமாறு உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ம-8)

# ஜி.சீ.ஈ. சாதாரண பெறுபேற்றில் கணிப்பீட்டு புள்ளிகளும் இணைப்பு

வலிகாமம் தெற்கு,ஒக்.29

இந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களில் முதன்முதலாக பாடசாலைமட்டக் கணிப்பீட்டு புள்ளிகளும் சேர்க்கப்படவுள்ளன.

இது தொடர்பாக 10ஆம், 11ஆம் தரங்களில் புள்ளித்தாள் படிவங்களைப் பூர்த்திசெய்தல் பற்றிய அறிவுறுத்தல் கூட்டங்கள் பாடசாலை அதிபர்களுக்கும், கணிப்பீட்டுக்கு பொறுப்பாக விளங்கும் ஆசிரியர்களுக்கும் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைகளுக்குரிய பரீட்சைத் திணைக்களத்தின் எஸ்.பி.ஏ.புள்ளிப் பதிவுத்தாள் படிவங்கள் மேற்படி அறிவுறுத்தற் கூட்டத்தின்போது வழங்கப்படவுள்ளன. அத்துடன் அவற்றைப் பூரணப்படுத்துவது தொடர்பான விரிவான அறிவுறுத்தல்களும் இதன்போது வழங்கப்படும்.

வலிகாமம் கல்வி வலயத்தில் இந்த அறிவித்தல் கூட்டங்கள் இம்மாதம் 31ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும்-

நவம்பர் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (ம-152)

# செயலக அதிகாரிகள் சிலருக்குப் பதவியுயர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக செ.பத்மநாதன் அண்மையில் பதவியேற்றதை அடுத்து, செயலக அதிகாரிகள் சிலருக்குப் புதிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வருகின்ற என்.சிவபாதசுந்தரம் திட்டப்பணிப்பாளராகவும்; உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்ற கே. வீரபத்திரபிள்ளை தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபராகவும் (A.G.A. Head Quarters) நியமிக்கப்பட்டுள்ளனர்.

திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.மகாலிங்கம் அப்பதவியில் இருந்து விலகியதை, அடுத்து கடந்த சில மாதங்களாக இப்பதவி வெற்றிடமாகவே இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

# ஆரம்பக்கல்வி தரமேம்பாட்டை செயற்படுத்த நடவடிக்கைகள்

வலிகாமம் தெற்கு,ஒக்.29

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சேவைக்கால பயிற்சிகள் பற்றி பாடசாலை அதிபர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் ஆரம்பக்கல்வி தரமேம்பாட்டை ஏற்படுத்த வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

இது தொடர்பாக ஆசிரியர் சேவைக்கால பயிற்சிச் செயற்திட்டத்தின்கீழ் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வுகள் நாளை புதன்கிழமை தொடக்கம் நவம்பர் மாதம் 2ஆம் திகதி வரை கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.

30ஆம் திகதி புதன்கிழமை - சங்கானைக் கோட்ட அதிபர்களுக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் -

31ஆம் திகதி வியாழக்கிழமை- சண்டிலிப்பாய் கோட்ட அதிபர்களுக்கு மானிப்பாய் ஆசிரிய நிலையத்திலும்-

நவம்பர் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை - உடுவில்; சண்டிலிப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

நவம்பர் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை - உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (ம-152)

# ஜனாதிபதி நீட்டிய நட்புக்கரத்துக்கு அரசாங்கம் அளிக்கும் பதில் என்ன?

## பொ.ஐ.மு. பேச்சாளர் அமுனுகம வினவுகிறார்

கொழும்பு,ஒக்.29

ஜனாதிபதி சந்திரிகா, அரசுக்கு நீட்டியுள்ள நட்புக்கரத்துக்கு அரசின் பதில் என்ன? என்று வினவுகிறார் பொ.ஐ.மு. பேச்சாளரான சரத் அமுனுகம.

நாட்டுக்கு இது தொடர்பாக ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு அரசாங்கம் புதனன்று பதிலளிக்காவிடின், பதிலளிக்க அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பது சிவில் சமூகங்களைப் பொறுத்ததாகும் எனவும அவர் கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலேயே சரத் அமுனுகம இவற்றைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், "நாட்டின் இன்றைய பொருளாதார நிலையையும் இனப்பிரச்சினையையும் ஜனாதிபதி தனது உரையில் ஆய்வு செய்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு நாம் கோரியிருக்கின்ற போதிலும் அரசாங்கம் இன்னமும் அது குறித்துப் பதிலளிக்கவில்லை" - என்றார்.

(ஐ)

## ஊர்காவற்றுறையில்

# கடற்படையினர் மீண்டும் அ.அட்டை சோதனை!

அனலைதீவு, எழுவைதீவு மக்கள் பிரயாணம் செய்யப் பயன்படும் ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோயில் துறைமுகத்தில் கடற்படையினர் அடையாள அட்டைச் சோதனையை நேற்று ஆரம்பித்துள்ளார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபின்னர் இத்துறைமுகத்தில் காவல் கடமையில் ஈடுபட்ட கடற்படையினர் தற்சமயம் அங்கு முகாம் ஒன்றினை அமைத்துள்ளனர். ஆரம்பத்தில் அடையாள அட்டை; பொதிகள் சோதனை என இருந்த நடைமுறை மக்களினதும், பொது அமைப்புகளினதும் ஆட்சேபனைகளை அடுத்து கைவிடப்பட்டிருந்தது.

ஆனால், இது மீண்டும் ஏன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனத் தெரியாது மக்கள் திகைக்கின்றனர். பிரயாணிகள் தங்குமிட வசதியோ, நிழலோ ஏனைய அடிப்படை வசதிகளோ அற்ற துறைமுகத்தில் வெயிலிலும் மழையிலும் தவித்துப் பிரயாணம் செய்யும் மக்களுக்கு இச்சோதனை மேலும் வேதனையென பிரயாணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

### 'ஏ' பொஸிடிவ் இரத்தம் தேவை

யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கிக்கு, A+(ஏ பொஸிடிவ்)ரக இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி அறிவித்திருக்கிறார்.

இந்த ரக இரத்தத்தை தானம் செய்ய விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

### கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையினரின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு விசேட கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் "தமிழ் மறை ஞான இலக்கியம் ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் சென்னை கிறிஸ்தவ கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மோசசு மைக்கல் பாரடே கருத்துரை வழங்குவார். (ம-5)


# WANTED

**AIRLINE TICKETING OFFICER**

With G.C.E.(A/L) qualification and qualification on Airline Ticketing. Minimum experience of One (01) year. Ability to speak English and Shinhala Will be an added qualification.

**TECHNICIANS/TRAINEES**

Young, dynamic with NDI or an equivalent qualification. Good knowledge in Electronics, Electricals and Telephone Systems. Trainees should have fair Knowledge in Electronic and Electrical equipment.
Salary negotiable.

Walk - in **Thampi Air Tours (Pvt) Ltd.**
*C/o Thampi Communication.*
*90, Kanthappasegaram Road,*
*Jaffna.* (C/24536)


### வறுமை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொடுத்து விடுகிறார்கள்.

**விவாகரத்து**

வரதட்சணைப் பணம் கிடைக்கிறதே என்பதற்காக தமது ஆண்பிள்ளைகளை பெற்றவர்களும் இந்த திருமணத்திற்கு சம்மதிக்கிறார்கள். வரதட்சணைப் பணம் முழுவதையும் கொடுக்க முடியாதநிலை ஏற்படும் போது விவாகரத்து நடக்கிறது. கிட்டத்தட்ட 90 சதவீதம் பெண்கள் விவாகரத்து செய்யப்படுகிறார்கள். அதன் பிறகு வளர்ந்து ஆளான பிறகு மறுமணம் செய்து கொண்டாலும் அது நிலைக்காமல் போய்விடுகிறது.

வடக்கு பங்களாதேஷில் ககாலு என்று இடத்தில் வசிக்கும் ஷகிதா பேகத்துக்கு 9 வயதில் திருமணம் நடந்தது. மணமகனும் அவளைப் போலவே பால்ய வயதினன்.

திருமணத்துக்கு முன் பேசியபடி வரதட்சணைப் பணத்தை அவளது தந்தையால் கொடுக்க முடியவில்லை. இதனால் திருமணமான 3 மாதத்தில் விவாகரத்து செய்யப்பட்டு, தாய் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டாள்.

**பெருகிவருகிறது**

ஒவ்வொரு மாதமும், பால்ய விவாகம் பெருகிவருகிறது. வறுமையில் வாடும் பெற்றோர், பணம் இல்லாத கொடுமையால், தங்களை நம்பியிருக்கும் இளந்தளிர்களை திருமணம் செய்து யார் வீட்டிற்காவது அனுப்பி விடவேண்டும் என்று நினைக்கிறார்கள் என்கிறார் ஷகிதாவின் மாமா அப்துல்.

"விவாகரத்தைப் பற்றி நாங்கள் கவலைப்படுவது கிடையாது. அதில் நிறைய நடக்கிறது. அது எங்களுக்கு பழகிப் போய்விட்டது. விவாகரத்து ஆகி வந்த பெண்கள் மறுமணம் செய்து வைக்கப்படுகிறார்கள்" என்கிறார் அப்துல்

**60 லட்சம் சிறுமிகள்**

மனித உரிமைக்குழு நடத்திய ஆய்வில் கடந்த 30 ஆண்டுகளில் 60 லட்சம் பெண்களுக்கு பால்ய விவாகம் நடந்ததாகவும் அவற்றில் 90 சதவீதம் விவாகரத்தில் முடிந்ததாகவும் தெரிவிக்கிறது.

பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படுவதை விரும்பாத சமூகப் பெரியவர்களும் இந்த பால்ய விவாகத்துக்கு ஆதரவாக இருப்பதாக கிராமவாசி தராமியா கூறினார்.

மியா இஸ்லாமிய பள்ளிக்கூடத்தில் படித்தவர். அவருக்கு வயது 17. 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. 2 குழந்தைகள் இருக்கின்றன. (ம)

## திருமலை மாவட்டத்தில்

# யுத்தத்தால் 8 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்

திருகோணமலை,ஒக்.29

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் எண்ணாயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். 12 அகதிகள் முகாம்களிலும் 1000 குடும்பங்கள் வாழ்க்கையை நடத்துகின்றன.

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் நடத்திய சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை புனித சூசையப்பர் மண்டபத்தில் நடைபெற்றன.

திருகோணமலை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் என்.இரட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர் நடபுகேந்திரன் உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்நாட்டில் தற்போது நிலவுகின்ற சமாதான சூழல், நிரந்தர சமாதானத்தை விரைவில் கொண்டுவராது என்ற எண்ணம் அநேகர் மத்தியில் நிலவுகின்றது.

நாடு முழுவதும் 375 அகதி முகாம்கள் உள்ளன. அவற்றில் 22 ஆயிரம் குடும்பங்கள் வாழ்க்கை நடத்துகின்றன. இம்மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு சமாதான சூழ்நிலை அவசியம்.

இம்மக்களைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் 500 கோடி ரூபாவைச் செலவிடவேண்டியுள்ளது. இவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேலதிகமாக 3 கோடி ரூபா செலவிடவேண்டியுள்ளது. இத்தொகை அபிவிருத்திக்குச் செலவிடப்படுமாயின் எமது நாடு அபிவிருத்தி அடையும்.

நாடு அபிவிருத்தி அடையவேண்டுமாயின் அகதிமுகாம்களிலுள்ள மக்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

இன்று சர்வதேச சமூகத்தினர் இலங்கையில் சமாதானம் தேவை என்பதில் ஆர்வமாக இருக்கின்றார்கள் - என்றார்.

(ம)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்

**நவரத்தினம் சிவசீலனின் (உள்நாட்டு வியாபாரத் திணைக்களம்)**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நவரத்தினம் நாகபூஷணி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* (C/24534)

யாழ்.மாவட்ட செயலக ஊழியர்களும், நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா செந்தில்நாதன்

(கார்ச்சாரதி)

யாழ்ப்பாணம், ஸ்ரேசனடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், பண்டாரக்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செந்தில்நாதன் நேற்று (28.10.2002) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் மகனும் பத்மாவதியின் அன்புக்கணவரும் சிறீஸ்கந்தராசா (சுவிஸ்), குகதாசன் (லண்டன்), உருத்திரா (ரூபா - லண்டன்), குமரேசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் இராசேஸ்வரி (சுவிஸ்), புவனேஸ்வரி (லண்டன்), நவரத்தினம் (லண்டன்), சத்தியபாமா ஆகியோரின் மாமனாரும் சுதர்சன், சுரேஸ், வசந்தரூபி, செந்தூரன் (பிரபு), சுஜாதா, சுஜிதா, மதுஷன், கபிலன், காயத்திரி, மிதுஷியா, பகீரதன் ஆகியோரின் பேரனாரும் டெனிசியாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்

*இல.7, பண்டாரக்குளம் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (10020)

தகவல்:
குமரேசன்
(மகன்)

## திருமதி சுப்பிரமணியம் ஞானாமிர்தம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் ஞானாமிர்தம் நேற்று (28.10.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் செல்லத்துரை, சோமசுந்தரம், பத்மாவதி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.10.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை கரச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிளாக் வீதி,*
*சங்கானை.* (10023)

தகவல்:
சி.சோமசுந்தரம்
(சகோதரர்).

## குஞ்சிதபாதக்குருக்கள் ஹரிஹரசர்மா

(பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை - கொழும்பு)

கொழும்பைச் சேர்ந்த குஞ்சிதபாதக்குருக்கள் ஹரிஹரசர்மா அவர்கள் நேற்று (28.10.2002) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கொழும்பு பொன்னம்பலவாணேசர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.சி.குஞ்சிதபாதக்குருக்கள் - சாந்தநாயகி அம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் - கௌரி அம்மா ஆகியோரின் மருமகனும் பவானி அம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*சிவஸ்ரீ.சி.குஞ்சிதபாதக்குருக்கள்,*
*38,ஸ்ரீராமநாதன் வீதி,*
*கொழும்பு - 13.*
T.P. :- 01-330459 (10021)

தகவல்:
சோ.சந்திரசேகரசர்மா
சிவன்கோவில், மயிலணி,
சுன்னாகம்.


# யாழ்ப்பாணம் மாநகரசபை

## கட்டட நிர்மாண, வீதி அமைப்பு வேலைகளுக்குத் தேவையான கல் வகைகள் வழங்குநர்களைக் கோரல்

2002ஆம் ஆண்டுக்கான மாநகரசபையின் வேலைத் திட்டங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் கற்களை மாநகரசபை எல்லைக்குள் விநியோகிப்பதற்கான கூறு விலைகளை எம்மால் கோரப்படும் சகல விளம்பரங்கள் அடங்கிய படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்து 07.11.2002ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அரக்கு முத்திரையிட்டு 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

| அளவு வகை | தேவையான அளவு | 1 கியூப் விலை | உடன் வழங்கக்கூடிய அளவு |
|---|---|---|---|
| 3/4" கிறசர் கல் | 30 கியூப் | ....... | ....... கியூப் |
| 1" ” | 10 ” | ....... | ....... |
| 1 1/2" ” | 20 ” | ....... | ....... ” |
| 2" ” | 250 ” | ....... | ....... ” |
| 4" கையால் உடைத்தது | 225 ” | ....... | ....... ” |
| 6"/9" கிளறி எடுத்த கல் | 25 ” | ....... | ....... ” |

இ.இராமலிங்கம்,
*மாநகர சபை ஆணையாளர்*
*மாநகர சபை*
*யாழ்ப்பாணம்.* (C/24535)

திகதி : 28.10.2002

# ஈழத்தமிழ்ப் புலிகளின் குருதியில் எழுதப்பட்ட மானுட கானத்தை உலகுக்கு உரைத்த 'கூடல்'

**அண்மையில் இடம்பெற்ற 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வின் தொகுப்பின் ஒரு பகுதி ஏற்கனவே 'உதயனில்' வெளியாகியிருந்தது. அதன் இறுதிப் பகுதி இன்று வெளியாகிறது.**

தமிழ்மக்கள், சிங்களமக்களுக்கு ஒருபோதும் எதிரானவர்களல்லர். அவர்களின் போராட்டங்கள் யாவும் இனவாதம் கக்கும் பேரினவாத அரசியல் சக்திகளுக்கு எதிரானதே



என்ற உண்மையை சிங்கள மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்திக்கொண்டிருந்தது மானுடத்தின் தமிழ்க் கூடல்.

21ஆம் திகதி காலை விழாச் சுடரேற்றத்துடன் ஆரம்பமாகின மூன்றாம் நாள் நிகழ்வுகள். விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ் விழி வரவேற்புரை நிகழ்த்தினார். எமது மண்ணில் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துகின்ற பொறுப்பு தமிழ்மக்களின் கைகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது சிங்கள, முஸ்லிம் மக்களிடமும் இருக்கிறது என்ற உண்மையை தமிழ் விழி தனது உரையில் தெளிவுபடுத்தினார். இதற்காகவே மூன்று இனங்களையும் சேர்ந்த பேராளர்களை இணைத்து இந்த மாநாடு நடத்தப்பட்டது எனவும் அவர் கூறினார்.

நிகழ்வில் சிறப்புரையாற்றினார் செ.விந்தன், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று பொய்ப் பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆனால், உண்மையில் அவை விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் அல்ல. அவை ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களாகும். இதுவும் உலக நாடுகளுக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டிய உண்மை - என்றார்.

மூன்றாம் நாள் நிகழ்வில் பொது அமர்வு மற்றும் 'திரைப்படம்' தொடர்பான அமர்வுகள் இடம்பெற்றன.

அம்மன்கிளி முருகதாஸ், பேராசிரியர் அ.சண்முகதாஸ், சோ.கிருஷ்ணராஜா, க.அருந்தாகரன், வாசுதேவன், ஞானரதன், அ.ஜேசுராசா, பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, விமல் சாமிநாதன் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர்.

தமிழகத்தில் சர்ச்சைக்குரிய திரைப்படமான 'காற்றுக்கென்ன வேலி' திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் தமிழக ஓவியர் ட்ராஸ்கி மருது ஆகியோர் அன்றையதினம் சிறப்புரையாற்றினர்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் தீரங்களை எடுத்து விளக்கும் வகையில் அமைந்த திரைப்படம் 'காற்றுக்கென்ன வேலி'. அதன் இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் உரையாற்றும் போது -

ஈழவிடுதலைப் போராட்டத்தின் தீரத்தையும் போராளிகளின் மன உறுதிகளையும் எடுத்து விளக்குவதன்மூலம் சூடு சுரணையற்றிருக்கும் தமிழகத் தமிழர்களைத் தட்டி எழுப்புவதற்காகவே தான் அந்தப் படத்தை இயக்கியதாகக் குறிப்பிட்டார். எவ்வளவோ இழப்புக்கள் துன்ப, துயரங்கள் மத்தியில் போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்குக்கூட மறுத்து நிற்கும் தமிழக அரசு - தமிழக மக்கள் ஆகியோருக்கும் மனிதாபிமானத்தைப் புகட்டவேண்டிய தேவை அங்கு இருக்கிறது - என்றார் புகழேந்தி.

அந்தப் படத்தில் வருகின்ற மணிமேகலை என்ற பாத்திரம் எனது கற்பனைப் படைப்பாகவே இருந்தது. ஆனால், நான் புளியங்குளத்தைத் தாண்டி இங்கு வருவதற்கிடையில் எத்தனையோ மணிமேகலைகளைக் கண்டுகளித்துவிட்டேன் என்று அவா

கூறியபோது வீரசிங்கம் மண்டபம் கரகோஷத்தால் நிறைந்தது.

அடுத்து, சிறப்புரையாற்றினார் பிரபல ஓவியர் ட்ராஸ்கி மருது, விடுதலைப் புலிகளுக்கு பல ஓவியங்களை வரைந்த இவர்தான், தமிழ்க் கூடல் மாநாட்டுக்கான நினைவுச் சின்னத்தையும் வரைந்தவர் என்பது முக்கியமான விடயமாகும்.

இந்தச் சின்னத்துக்கு அதனை வரைந்த ஓவியர் ட்ராஸ்கி மருது அளித்த விளக்கம் ஒருவகையாக இருந்தாலும் அறிஞர்கள் பலரும் அதற்கு தமது பார்வையில் வெவ்வேறு வகையான அர்த்தங்களை வெளியிட்டார்கள்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்ற அர்த்தத்திலேயே இவ்வாறு இந்தச் சின்னத்தை வரைந்ததாகக் கூறினார் ஓவியர் மருது.

ஆண்களும் பெண்களும் தமிழீழத்தைத் தமது தோள்களில் தாங்கியிருக்கின்றார்கள் என்பதை இந்தச் சின்னம் எடுத்துக்காட்டுகிறது என்றனர் சில அறிஞர்கள்.

தமிழ்க் கூடலின் இறுதிநாள் நிகழ்வில் சிறப்புரையாற்றிய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் இரா.திருமாவளவன் இந்தச் சின்னத்துக்கு மேலும் ஒரு வகையான விளக்கத்தைக் கூறியிருந்தார். படைத்தளம், அரசியற்தளம், பண்பாட்டுத்தளம் ஆகிய மூன்று தளங்களுமே தமிழீழத்தைத் தாங்கிநிற்கின்றன. இந்த மூன்று தளங்களிலும் நின்று வெற்றிவாகை சூடுவதன்மூலமே தமிழீழத்தை அடையலாம் என்பதுபோல இந்தச் சின்னம் காணப்படுகிறது என்றார் திருமாவளவன்.

## தீர்மானங்களை நிறைவேற்றுவதிலேயே மாநாட்டின் முழுவெற்றி தங்கியுள்ளது

ஓவியர் மருதுவின் சிறப்புரையைத தொடர்ந்து நிறைவுரையாற்றினார் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த புதுவை அன்பன். "காலத்துக்குக் காலம் விடுதலைப் போராட்டத்துக்கு உரமிட்டு வளர்த்த - போராட்ட நிலைப்பாடுகளைப் பொதுமக்களுக்கு வெளிபடுத்திய பெருமை தமிழீழக் கலைஞர்களையும் சாரும்" என்று கலைஞர்களுக்குப் புகழாரம் சூட்டியிருந்தார் தேசியத் தலைவர் பிரபாகரன்.

அந்தவகையில் கடந்த ஆறு வருடங்களாக வன்னிப் பெருநிலப் பரப்பில் நாடகங்கள், தெருவெளி நாடகங்கள் என்பவற்றை நிகழ்த்திய கலைஞர்களைப் பற்றியும் வன்னி மக்கள் எதிர்கொண்ட துன்ப, துயரங்கள் குறித்தும் புதுவை அன்பன் தமது உரையில் வெளிப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து விடுதலை புலிகளின் நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, விடுதலைப் புலிகளின் தமிழீழ நீதி, நிர்வாக முறைமைகள் குறித்து தமது உரையில் எடுத்துக்காட்டினார்.

அவரது உரையைத் தொடர்ந்து என்.எஸ்.மணியத்தின் நெறியாழ்கையில் உருவான "கண்ணகி வழக்குரைத்தல்" என்ற பாரம்பரிய நாட்டுக் கூத்து இடம்பெற்றது.

அத்துடன் மூன்றாம் நாள் நிகழ்வுகள் முழுமையடைந்தன.

22ஆம் திகதி காலை 9 மணிக்கு மானுடத்தின் தமிழ்க் கூடலின் இறுதி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

"போரடினால்தான் தமிழனுக்கு வாழ்க்கை என்றாகிவிட்டது. அஹிம்சை ரீதியாகவேனும் ஆயுத ரீதியாகவேனும நாங்கள் போரடியே ஆகவேண்டும் என்றாகிவிட்டது" என்று இறுதிநாள் நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய 'நிதர்சனம்' பொறுப்பாளர் சேரலாதன் குறிப்பிட்டார். விடுதலைப் போரின் தியாக வரலாறுகள் குறித்து தனது உரையில் விளக்கிய அவர், அச்சுவேலிப் பகுதியிலுள்ள வீடொன்றில் தனது மகனையும் மூன்று போராளிகளையும் மறைத்து வைத்திருந்த தாய் ஒருவர் அங்கு வந்த இராணுவத்தினரை தனது கைகளை நீட்டி மறித்து, சண்டைபிடித்து இராணு

**அற்புதன்**

வத்தின் துப்பாக்கிச் சூடுபட்டு அந்த இடத்திலேயே இறந்தாள் என்று குறிப்பிட்டார்.

போராளிகளைக் காப்பதற்காக தனது உயிரைத் தியாகம் செய்த அந்த வீரத் தாயின் தியாகத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டபோது அங்கி



ருந்த மக்களின் முகங்கள் இனம்புரியாத சோகத்தில் ஆழ்ந்துபோனதை அவதானிக்கமுடிந்தது.

அதனைத் தொடர்ந்து "சர்வதேச அரசியலும் சிங்கள உயர் குழாமும்" என்ற தலைப்பில் விரிவுரையாளர் மு.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார்.

உலக மயமாக்கலின் விளைவுகள் குறித்தும் அமெரிக்க வல்லரசின் ஆதிக்கம் குறித்தும் அவர் நீண்ட உரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து அன்றையதினம் காணபியக் கலைகள், ஊடகம் ஆகிய தலைப்புகளில் அமர்வுகள் இடம்பெற்றன.

ரமணி, பா.அகிலன், படுஸ்ரட்ணம், கோபாலி, சனாதனன், வீ.ரீ.தமிழ்மாறன், ஆ.சிவனேசச்செல்வன், பா.சிவகுமார், றோகித பாஷன அபேவர்த்தன, மஞ்சுள வெடிவர்த்தனே, அமரதாஸ், கோபாலரத்தினம், சி.ரகுராம் ஆகியோர் இந்த அமர்வுகளில் விளக்கவுரைகளை ஆற்றினர்.

இந்த அமர்வுகளைத் தொடர்ந்து மாலை மிகவும் முக்கியமான மூவரின் உரைகள் இடம்பெற்றன.

அமைச்சர் பெ.சந்திரசேகரம், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் இரா.திருமாவளவன், கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோரே அந்த மூவரும்.

"கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்களும், தமிழ்மக்களும் மேற

கொண்ட அஹிம்சை வழியிலான - ஜனநாயக வழியிலான - போராட்டங்கள் வெற்றிகரமானதாக அமையவில்லை.

"இந்த ஜனநாயகத் தோல்விகளே தமிழர்கள் ஆயுதம் ஏந்தக் காரணமாய் அமைந்தன" - என்றார் அமைச்சர் சந்திரசேகரன்.

வட பகுதியில் தமிழ்மக்கள் அனுபவித்த துன்ப, துயரங்களை மலையகத் தமிழர்கள் நேரடியாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை. அவர்கள் ஊடகங்கள் மூலமாகவே அவற்றை அறிந்தார்கள். பெரும்பாலான ஊடகங்கள் அவர்களுக்குத் தவறான தகவல்களையே வழங்கி வந்தன - என்றார் சந்திரசேகரன்.

அவரைத் தொடர்ந்து உரையாற்ற அழைக்கப்பட்டார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழக சட்டமன்ற உறுப்பினருமான இரா.திருமாவளவன். அனைவராலும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டு வந்த உரை அது.

விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்வில் கலந்து கொண்டதன்மூலம் தமிழகத்தில் 'பொடா' சட்டத்தின்கீழ் அவா கைதுசெய்யப்படக்கூடும் என்ற பின்னணியில் அவர் உரையாற்றினார்.

ஈழத் தமிழர்கள் இந்த மண்ணில் புரிந்திருக்கின்ற தியாகங்களைப் பார்க்கின்றபோது குறைந்தபட்சம் அவர்களுக்காகச் சிறை செல்வதற்குககூட நான் தயாரில்லை என்றால் தான் தமிழனாக வாழ்வதில் அர்த்தமே இல்லை என்று அவர் உணர்ச்சிபொங்க உரையாற்றியபொழுது வீரசிங்கம் மண்டபத்தில் எழுந்த கரகோஷ ஒலி

கள் ஓய்வதற்கு சில நிமிடங்கள் எடுத்தன.

திருமாவளவனின் உரை கரகோஷ ஒலிகளுக்கு மத்தியில் உணர்வுபூர்வமாகத் தொடர்ந்தது. நீங்கள் புரிந்திருக்கின்ற இந்தத் தியாகங்களைப் பார்க்கின்றபோது முப்பது மைல்களுக்கு அப்பால் பிறந்த நான் முப்பது மைல்களுக்கு இப்பால் பிறந்திருக்கக்கூடாதா? என்ற வேதனை என்னை வாட்டுகிறது என்று அவர்

கூறியபோது அங்கிருந்த பேராளர்கள் சிலிர்த்துப்போனார்கள்.

அவரத்து உரையைத் தொடர்ந்து தமிழ்க் கூடல் நிகழ்வின நிறைவுரையை நிகழ்த்தினார் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

நிகழ்வில் கலந்துகொண்ட பெரியோர்கள் - போராளிகளுக்கு நன்றி தெரிவித்த அவர், சிங்கள மக்களுக்கு அறைகூவல் ஒன்றையும் விடுத்தார்.

"சிங்களச் சகோதரர்களே! போர் போதும், அழிவுகள் போதும். நாங்கள் நீட்டும் நேசக்கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். உரிமைகளைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு கைகோர்த்து நடப்போம் வாரீர்" என்று அழைத்தார் புதுவை.

மட்டக்களப்பு சீலாமுனை கலைக் கழகம் வழங்கிய 'அருச்சுனன் பெற்ற பாசுபதம்' என்ற வடமோடிக் கூத்தும் இறுதியில் இடம்பெற்றது.

இந்த மானுடத்தின் தமிழ்க் கூடல

மாநாட்டின் முடிவின்போது இரண்டு முதன்மைப் பிரகடனங்கள் நிறைவேற்றப்பட்டன.

✦ தமிழ்மக்களின் விடுதலையை எல்லாத் தளங்களிலும் முழுமைப் படுத்துவது. இதில் உலகெங்கிலும் உள்ள தமிர்களின் ஒருங்கிணைப் பைப் பெறுவது.

✦ இரண்டாயிரம் ஆண்டுகால செய்யுட் பாரம்பரியம் உடைய தமிழ்மக்களாகிய நாம் தமிழ் விழிப்பையும் தமிழ் வேர்களையும் மூன்றாவது மில்லேனியத்துக்கு - அதாவது தகவல் யுகத்துக்கு - விரிவுபடுத்துவது.

இவையிரண்டுமே இந்த முதன்மைத் தீர்மானங்களாகும். இவற்றை நிறைவேற்றுவதற்குரிய முன்னெடுப்புக்கள் பலவும் இத்துடன் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், இறுதிநாள் நிகழ்வின் மதிய இடைவேளையின்போது இம் மாநாட்டின் நினைவாக வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள வெளியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

மூவினங்களையும் சேர்ந்த பேராளர்கள் இந்த மரக்கன்றுகளை நட்டு வைத்தது இனங்களுக்கிடையிலான ஒற்றுமைத்தன்மையை மேலும் வலுப்படுத்துவதாய் அமைந்தது.

தமிழர் போராட்டங்களை பயங்கரவாத நடவடிக்கைகளாகச் சித்திரித்துக் காட்டியபோது அவற்றை அப்படியே நம்பிவிட்டிருந்த உலக நாடுகள் பலவும் எமது போராட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்க மறுத்துவந்தன.

பயங்கரவாத நடவடிக்கைகள் வேறு உரிமைப்போராட்டங்கள் வேறு. எமது போராட்டம் உரிமைப் போராட்டமே என்ற உண்மையை உலகின் செவிப்பறைகளில் ஓங்கி அறைந்தது தமிழ்க் கூடல்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் காலத்துக்குக்காலம் அந்தந்தப் பிரதேசங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவந்த சுகபோகங்களை அனுபவித்து வாழ்ந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்களின் அடிமனதில் பொதிந்திருந்த அபிலாசைகள் வேறு வடிவத்தில் இருந்தன.

சுயநிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம் போன்ற அடிப்படை அபிலாஷைகளை அவர்கள் தமது அடிமனதில் புதைத்து வைத்திருந்தார்கள். தமது உண்மையான விருப்பங்களை வெளியே சொல்லப் பயந்துகொண்டிருந்தனர் தமிழ்மக்கள். அந்தவேளையில், யாழ் பல்கலைக்கழக சமூகம், மக்களின் அபிலாஷைகளை வெளி உலகுக்கு எடுத்துச்சொலவதற்காக 'பொங்கு தமிழ்' என்ற எழுச்சி நிகழ்வை நடத்தியது.

அதுபோலவே இப்போது மானுடத்தின் தமிழ்க் கூடலும் இடம்பெற்றது.

மானுட விடுதலையை நோக்கி நாம் அனைவரும் அதாவது தமிழ், சிங்கள இனங்கள் அனைத்துமே நடைபோடவேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டதை இந்த மாநாடு உணர்த்தியிருக்கின்றது.

தமிழர்களின் உண்மையான மனநிலையைப் புரிந்துகொண்டு, அவர்களின் போராட்ட நியாயங்களை உணர்ந்துகொண்டு எதிர்காலத்தில் சிங்களமக்கள் இனப்பிரச்சனை தொடர்பாக சிறந்த முடிவுகளை எடுபதற்கு இந்த மானுடத்தின் கூடல் வழிவகுத்திருக்கும் என்பது வெள்ளிடைமலை.

ஈழ விடுதலைப் புலிகளின் குருதியில் எழுதப்படுகின்ற மானுடகானத்தை "ஏழு கடல்களும் பாடட்டும் - இன்னும் எட்டாத வானம் கேட்கட்டும்" என்ற தமிழகக் கவிஞர் இன்குலாப்பின் கவிவரிகளுக்கிணங்க புலிகளின குருதியில் எழுதப்படுகின்ற இந்த மானுடகானம் எட்டாத உலகெங்கும வட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இருந்தாலும், இந்த மாநாட்டின் முடிவில் பேராளர்கள் அனைவரும் ஒன்றுகூடி நிறைவேற்றிய முதன்மைப பிரகடனங்கள் மற்றும் துணைப் பிரகடனங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதிலும் - இவ்வாறான மாநாடுகளை வருடந்தோறும் தமிழீழத்தின் பிரதேசங்களில் ஒன்றில் நடத்துவதிலும்தான் இந்த மாநாட்டின் முழுமையான வெற்றி தங்கியிருக்கின்றது என்பது கவனிக்கவேண்டிய விடயமாகும். ✻

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து மார்க்வோ ஓய்வு பெறுகிறார்

## ஆஷஸ் அணியிலிருந்து நீக்கப்பட்டபின் அறிவிப்பு!

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மார்க்வோ சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். நேற்று அவர் இவ் வறிவிப்பை விடுத்தார்.

இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடர் முதலாவது போட்டிக்கான ஆஸ்திரேலிய அணி விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது. இவ்வணியில் மார்க்வோ இடம்பெறவில்லை. இதை யடுத்தே சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதற்கு மார்க்வோ தீர்மா னித்துள்ளார்.

"ஒருநாள் போட்டிகளுக்கான அணி யிலிருந்து இவ்வருட ஆரம்பத்தில் நீக்கப்பட்டேன். தற்போது டெஸ்ட் அணியிலும் இடம்பெறவில்லை. இந் நிலையில் 37 வயதில் மீண்டும் ஆஸ்தி ரேலியாவுக்காக விளையாடும் சந்தர்ப பம் குறித்து எனது உணர்வுகள் இத் தீர்மானத்திற்கு வழிவகுத்தன".

- இவ்வாறு மார்க்வோ கூறியுள்ளார்.

"ஆஸ்திரேலியாவுக்காக மீண்டும் காலம் விளையாடியமையால் நான் பெரும் அதிர்ஷ்டசாலியாகவே இருந்



தேன்".

- இவ்வாறு மார்க்வோ மேலும் கூறினார்.

1965.06.02இல் பிறந்த மார்க்வோ 1988/89இல் அடிலெய்ட்டில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டி மூலம் சர்வதேச கிரிக்கெட் டிற்கு அறிமுகமானார்.

1990/91இல் அடிலெய்ட் மைதா னத்தில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் டில் அவர் காலடி வைத்தார். முத லாவது டெஸ்ட் போட்டியில் அவர் 138 ஓட்டங்களைப் பெற்றமை குறிப் பிடத்தக்கது.

இதுவரை 244 ஒருநாள் போட்டி களில் 8,500 ஓட்டங்களையும் (சரா சரி 39.35) 85 விக்கெட்டுக்களையும் பெற்றுள்ளார்.

128 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றி 8029 ஓட்டங்களையும் (சராசரி 41.81) 59 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினார். 20 டெஸ்ட் சதங்களையும் அவர் பெற்றுள்ளார்.

சிறந்த களத்தடுப்பாளர்களில் ஒருவரான மார்க்வோ, ஒருநாள் போட்டிகளில் 108 பிடிகளையும் டெஸ்ட் போட்டிகளில் 181 பிடிகளையும் கைப் பற்றியுள்ளார்.

எனினும், கடந்த ஒருவருட கால மாக மார்க்வோவின் ஆட்டம் பலவீன மாகவே இருந்தது.

இவ்வருட ஆரம்பத்தில் ஒருநாள் போட்டிக்கான அணியிலிருந்து மார்க் வோவும் அவரது சகோதரரான அணித் தலைவர் ஸ்ரீவோவும் நீக்கப்பட்டனர்.

அதன்பின் இவ்விருவரின் டெஸ்ட் வாழ்க்கையும் கேள்விக்குறியாகிய தாகவே காணப்பட்டது. எனினும் பாகிஸ்தானுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சதம் குவித்த தன் மூலம் ஸ்ரீவ்வோ, தனது நிலையை பலப்படுத்திக் கொண்டார். ஆனால், மார்க்வோவுக்கு அவ்வாய்ப் புக் கிட்டவில்லை. கடந்த 12 மாத காலத்தில் மார்க்வோவின் டெஸ்ட் துடுப்பாட்டச் சராசரி சுமார் 30 ஆகும். கடந்த 14 மாதங்களில் அவர் சதம் எதுவும் குவிக்கவில்லை. (ம)

# விளையாட்டு

விளையாடாமை குறித்து மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். எனினும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் துறையின் உன்னதமான காலத்தில் மிக நீண்ட

இதேவேளை -

முதல்தரப் போட்டிகளில் தொடர்ந் தும் விளையாடுவதற்கு மார்க்வோ விருப்பம் தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரிய டென்னிஸ் போட்டியில் ஜஸ்ரின் ஹெனின் சம்பியன்

ஆஸ்திரியாவின் லின்ஸ் நகரில் நடந்த மகளிர் டென்னிஸ் சுற்றுப் போட்டியொன்றில் பெல்ஜியம் வீராங் கனை ஜஸ்ரின் ஹெனின் சம்பியனாகி னார்.

ஞாயிறன்று நடந்த இறுதிப்போட் டியில் அமெரிக்க வீராங்கனை அலெக் சான்ரா ஸ்ரீவன்சனை 6-3, 6-0 விகி தத்தில் ஹெனின் வென்றார்.

காலிறுதிப் போட்டியில் முன்னணி வீராங்கனையான ஜெனிபர் கெப்ரி யாட்டியை தோற்கடித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியவர் அலெக்ஸான்ரா.

முதல் தடவையாக போட்டியொன் றில் சம்பியனாகும் நம்பிக்கையுடன் அவர் இருந்தார். எனினும் இறுதிப் போட்டியில் அவர் தோல்வியுற்றார்.

20 வயதான ஹெனின் 6 ஆவது தடவையாக சம்பியன் பட்டமொன்றை வென்றுள்ளார்.

# இந்திய - மேற்கிந்திய 3ஆவது டெஸ்ட் நாளை

இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவ தும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நாளை புதன்கிழமை கொல் கத்தாவில் ஆரம்பமாகின்றது.

இதற்கு முன்னர் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் அபாரமாக விளையாடி வெற்றிபெற்ற இந்திய அணி டெஸ்ட் தொடரை வென்றுள் ளது. இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி ஒரு சம்பிரதாயபூர்வ மான ஆட்டமே.

எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி முடிவடையும் இந்த டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து இவ்விரு அணி களுக்கும் இடையில் 7 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற வுள்ளன.

டெஸ்ட் போட்டித் தொடரை இந் திய அணியிடம் கைநழுவவிட்ட மேற் இந்தியத் தீவுகள் அணி ஒருநாள் போட்டிகளையாவது வெல்லவேண் டிய நிலையில் உள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முத லாவது சர்வதேச ஒருநாள் போட்டி கள் நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

ஏழு ஒருநாள் சர்வதேசப் போட்டி களும் நடைபெறவுள்ள திகதி, மைதா னம் என்பவற்றின் விவரம் வருமாறு:-

| திகதி | போட்டி | மைதானம் |
|---|---|---|
| நவம்பர் 6 | முதலாவது போட்டி | ஜாம்ஷெட்பூர் |
| நவம்பர் 9 | 2ஆவது போட்டி | நாக்பூர் |
| நவம்பர் 12 | 3ஆவது போட்டி | ராஜ்கோட் |
| நவம்பர் 15 | 4ஆவது போட்டி | அஹமதாபாத் (பகல்/இரவு) |
| நவம்பர் 18 | 5ஆவது போட்டி | பரோடா |
| நவம்பர் 21 | 6ஆவது போட்டி | ஜோத்பூர் |
| நவம்பர் 24 | 7ஆவது போட்டி | விஜயவாடா |

# இந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

இந்திய கிரிக்கெட் வீரர்கள் சங் கம் இன்று அங்குரார்ப்பணம் செய் யப்படவுள்ளது. இந்தியாவில் முதல் தரப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர் கள் அனைவரும் இச்சங்கத்தில் உறுப் பினராக விளங்குவர்.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் அருண்லால் தெரிவித்துள்ளார். இவர் இச்சங்கத் தின் செயலாளராகப் பதவிவகிக்க வுள்ளார்.

இந்திய டெஸ்ட் அணியின் முன் னாள் தலைவர் மன்சூர் அலிகான் பட்டோடி, இச்சங்கத்தின் தலைவரா கத் தெரிவுசெய்யப்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்திய அணித்தலைவர் சௌரவ கங்குலி, ராகுல் திராவிட், சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் இச்சங்கத் தின் நிறைவேற்றுக் குழுவில் இடம் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளின் போது வீரர்கள் சங்கம் அமைக்கப் படுவதன் அவசியம் வெகுவாக உண ரப்பட்டது.

அச்சுற்றுப் போட்டிக்கான ஐ.சி. சி.ஒப்பந்தத்திற்கு இந்திய வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், வீரர்கள் சார்பில் இந்திய கிரிக்கெட் சபையுடன் பேரம்பேசுவது யார் என்று சிக்கல் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை "முதல்தரக் கிரிக் கெட் வீரர்கள் அனைவரும் அங்கம் வகித்தால் மட்டுமே எந்தவோர் அமைப் பும் கிரிக்கெட் வீரர்களின் சங்கமாக அங்கீகரிக்கப்படும்"

- இவ்வாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அங்கீகரித்துள் ளது. (ம)


# தேசிய சேமிப்பு வங்கி

உலக சிக்கன தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கி வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல வெகுமதிகளையும், வசதிகளையும் வழங்கவிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



☆ உலக சிக்கன தினமான 31.10.2002 வியாழக்கிழமை "பிரெண்ட்ஸ்" (Friends) எனும் கணக்கு அறிமுகமாகின்றது.

❖ "பிரெண்ட்ஸ்" கணக்கு வாழ்நாள் முழுவதும் மாதாந்த வருமானம் வழங்கும் ஒரு சேமிப்புத் திட்டம் ஆகும்.
❖ 18 வயதிற்கும் 65 வயதிற்குமிடைப்பட்ட எவரும் தமக்காகவோ அல்லது வேறு ஒருவருக்காகவோ இக்கணக்கை ஆரம்பிக்கலாம்.
❖ அதி உயர் வட்டி வீதம் வழங்கப்படும்.
❖ ரூபா 500,000/= வரையான காப்புறுதிக் காப்பு உண்டு.
❖ இக்கணக்கை சுயதேவைக் கடன், வீடமைப்புக் கடன் போன்றவற்றுக்குப் பிணையாகச் செலுத்தமுடியும்.
❖ மேலதிக விவரங்களுக்கு அருகிலுள்ள கிளை முகாமையாளரை நாடுங்கள்.

☆ 31.10.2002இல் நடைபெறவிருக்கும் "ரிதிரேகா" 33ஆவது சீட்டிழுப்பிலிருந்து பரிசுத் தொகைகளும் பரிசு பெறுவோர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.



❖ முதலாம் பரிசு - ரூ.50 லட்சம் பெறுமதியான வீடு அல்லது பணப்பரிசு.
❖ இரண்டாம் பரிசு - ரூ.15 லட்சம் பெறுமதியான கார் அல்லது பணப்பரிசு.
❖ ஏனைய ஆறுதல் பரிசுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
❖ இதுவரை 3023 பேருக்கு வழங்கப்பட்டுவந்த பரிசில்கள் 33ஆவது சீட்டிழுப்பிலிருந்து 4432 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

☆ எமது வாடிக்கையாளரின் வசதிகருதி யாழ்.மாவட்டத்தின் சகல கிளைகளும் எதிர்வரும் 02.11.2002 சனிக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

☆ சகல வைப்புக்களுக்கும் அதியுயர் வட்டிவீதங்களை வழங்கிவரும் தேசிய சேமிப்பு வங்கியை என்றும் நாடுங்கள்.

NSB
உங்கள் குடும்ப வங்கி

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

(சி-24524)

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## யாழ்.மாவட்டம்
## பொதுச் சபைக் கூட்டம்

இடம் : புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

காலம் : 31.10.2002 வியாழக்கிழமை பி.ப. 4.00 மணி

★ அனைத்து கோட்ட த.க.நி.நிர்வாக சபை உறுப்பினர்களையும், நிர்வாகிகளையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*குறிப்பு:-* யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுகளுக்குட்பட்ட த.க.நிறுவன நிர்வாகிகளுக்கு இன்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 4மணிக்கு வலி.தெற்கு அரசியல்துறையினருடன் கலந்துரையாட விருப்பதால் தவறாது சமுகந்தரவும்.

தலைவர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ்.மாவட்டம்.

(10028)

# ஓராண்டு நிறைவினிலே...

நிஜமாக 09 - 11 - 1961



நிழலாக 08 - 11 - 2001

## புவிராஜா ஸ்ரீசந்திரராஜா (ஆசிரியர்)

(யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)
திதி 29.10.2002

சுந்தர் நிறுவனத்தில்
சந்திரனின் சிம்ம ஒலி
பணியாள யாவரையும்
விரைவாக வழிநடத்தும்
உயர்வாக வளர்ந்துவரும்
நிறுவனத்தின் நிலைகாண
நீரில்லை என ஏங்கும்.

*844, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10025)

சுந்தர் வெளியீடு
இயக்குநர், ஆசிரியர், மாணவர், பணியாளர்.

# ஓராண்டு நினைவலைகள்

நம்பிக்கை ஒளியாக 09.11.1961



இதய ஒலியாக 08.11.2001

## புவிராஜா ஸ்ரீசந்திரராஜா (ஆசிரியர்)

(யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)
திதி 29.10.2002


ஊக்கமுடன் வேலை செய்யும்
உத்தம உறவொன்று
தீர்க்க முடியாத வேதனையில்
தாக்கம் எமக்கென்று......
விழி நீரில் தோன்றும்......உமது
இனிய முகம் தேடுகின்றோம்.

*844, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10026)

*சோகத்தை நெஞ்சில் சுமந்து நிற்கும்*
ஐயா, அம்மா, தம்பி

# ஓராண்டு நினைவாக...

உறவாக 09.11.1961



நினைவாக 08.11.2001

## புவிராஜா ஸ்ரீசந்திரராஜா (ஆசிரியர்)

(யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)
திதி 29.10.2002

பாசப் புன்னகையில்
நேசத்தை தந்தவரே
ஓசைபடாது காலன்....கவர்ந்து செல்ல
தேற்றுவார் இன்றி....நாமும்
... கசிய...
இதயம் துடிக்க ...
... உன் நினைவுகளுடன்...

*67, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.* (10027)

அண்ணா, அண்ணி, சாயி, அருணி.

# மாணவர் ஒன்றிய தலைவர்கள் கூட்டம்

தென்மராட்சி,ஒக்.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர்களுக்கான கூட்டம் இன்று பி.ப. 1.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலைகளின் சிரேஷ்ட மாணவ தலைவர்கள் இருவரையும் இக்கூட்டதில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.(ஐ-117)

# ஸ்ரான்லிக் கல்லூரி தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய தமிழ்த்தின விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு செல்வன் ம.சசிகரன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி ப.இரத்தினவேல் கலந்துகொள்வார். (ஐ)

# ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம்

கொக்குவில்,ஒக்.29

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் சகல திணைக்களங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்வர். (ஐ-79)

# நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.29

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிமுதல் விததியாலய அதிபர் மு.செல்லையா தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் ப.கணேசலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக முன்னாள் உதவி விவசாயப் பணிப்பாளர் செ.லிங்கநாத பிள்ளையும் கலந்துகொள்வர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (ஐ-3)

# நல்லூரில் நடக்கும் தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஒக்.29

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நல்லைக்கந்தன ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவு தொடராக நடைபெற்று வருகிறது.

அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் எதிர்வரும் வெள்ளியன்று மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் சொற்பொழிவு நிகழ்வில் மாவை செ.நவரத்தினம் 'பெரும் பெயர் முருகன்' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (ஐ-3)


நிறைஞ்சனாஸ்
சாங்கானை
இன்று முதல்
எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி, நம்பியார், நாகேஷ் நடித்த
கலங்கரை விளக்கம்
(கலர் ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00
(C-24276)

நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், ரோஜா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
சின்னத்துரை
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(10015)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (புதியநேரம்)
அனைவரின் வேண்டுகோளுக்கு, இணங்க யூத் பிடிக்கப்பட்டுள்ளது
(C-24275)


# சிறுவர் கண்காணிப்புக் குழு கூட்டம்

கொக்குவில்,ஒக்.29

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் சிறுவர் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் கலந்துகொள்வர். (ஐ-79)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1927 - 01 - 22



மறைவு 2002 - 09 - 29

## திருமதி வேலன் சின்னத்தங்கம்

(திதி அட்டமி)

மறைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
வே.யோகராசா (மகன்)
*மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.*

*அன்னாரின் நினைவால் வாடும்:*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயலக்சுமி மதியாபரணம்

தாவடியைச் சேர்ந்த திருமதி விஜயலக்சுமி மதியாபரணம் கடந்த சனிக்கிழமை 26.10.2002 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P.S.சோமசுந்தரம் (சட்டத்தரணி) - இரத்தினம் தம்பதியினரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற முத்துவேற்பிள்ளை மதியாபரணம் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும் சரோஜாதேவி (கனடா), சாரதாதேவி (கனடா), சாவித்திரிதேவி (தெஹிவளை), பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம் (முன்னாள் உதவி நில அளவை அத்தியட்சகர்), இரகுபரன் (முன்னாள் தொலைத் தொடர்பு பரிசோதகர்), பரராஜசிங்கம் (முன்னாள் தேசிய வீடமைப்புத் திணைக்களம்), திருமதி பாஸ்கரதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜாதா, தனுஜா, யசோதா, வனஜா, சுதாகரன், நகுலினி, சர்மிலா, சஞ்சியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆஷா, ரோஷான், இஷானி, சேயோன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2002) புதன்கிழமை காலை 10.30 (பு.நே) மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*தாவடி,*
*கொக்குவில்.* (10029)

தகவல்:
மதியாபரணம் பத்மநாதன்
(மகன்).

## ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரை

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

கரவெட்டி மத்தியை வதிவிடமாகக் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் நேற்று (28.10.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் (பத்தினி) அன்புக் கணவரும் பார்த்தீபனின் (லண்டன்) பாசமிகு தந்தையும் பாமினியின் (லண்டன்) அன்பு மாமனாரும் பானுஷா, பாமிலா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*பவள கிரி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (C/24539)

தகவல்:
பாலசிங்கம்
(மைத்துனர்)

## திருமதி அன்னலட்சுமி சின்னராசா

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னலட்சுமி சின்னராசா (ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி) அவர்கள் 26.10.2002 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணபிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் நாகமுத்து சின்னராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் செந்தில்ராஜன் (சட்டத்தரணி, ஆஸ்திரேலியா), வளர்மதி (ஆசிரியை, கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்), கலைமதி (முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஆஸ்திரேலியா), நாகராஜன் (ஆஸ்திரேலியா), இந்துமதி (முன்னாள் ஆசிரியை, கொ/இராமநாதன் மகளிர் கல்லூரி - ஆஸ்திரேலியா), தணிகைராஜன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கோமதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதாகரி, சுமாதரன் (காந்தன்), ஜெயபரன், யமுனா, ஸ்ரீநிவாசன், சுபாஜினி, ஜெயதாஸ் ஆகியோரின் அருமை மாமியாரும் தமிழரசி, கௌரிசங்கர், ஸ்ரீசங்கர், ஜனார்த்தனி, கௌசிகன், தர்சிகன், துவாரகன், மாதங்கி, தேனுகா, யாதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விக்கினேஸ்வரமூர்த்தியின் (ஆசிரியர், கன்னியர்மடம் மகா வித்தியாலயம், இளவாலை) சிறியதாயாரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பாக்கியம்மா, நடராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பொன்னுத்துரை, நேசம்மா, கணேசு ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது: இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2002) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகி 4 மணிக்கு தகனக்கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் இடம்பெறும் என அறியத்தருகின்றோம்.

*65/2. ... லேன்,*
*கொழும்பு* (10030)

தகவல்
நாகமுத்து சின்னராசா
(கணவர்)
தொ.பே.-074-511397 (இலங்கை)
0402019522 (ஆஸ்திரேலி

# ஜனாதிபதி - பிரதமர் சகவாழ்வுக்கான தரகர் வேலை செய்ய நான் தயார்!

## அமைச்சர் மஹிந்த விஜேசேகர கூறுகிறார்

கொழும்பு,ஒக்.29

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான தரகர் வேலைக்கு நான் தயார் என்று, மீன்பிடி, நீரியல்வள அமைச்சர் மஹிந்த விஜேசேகரா கூறுகிறார்.

நாட்டின் இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நல்லுறவு இருக்கவேண்டும் என்பதாலேயே அதற்கு தான் தயாரக இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

உடப்பு மீனவர் கிராமத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவற்றை கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் பேசியதாவது:-

நான் பழைய ஜே.வி.பிகாரன், நான் பழைய சுதந்திரக்கட்சிக்காரன். நான் இப்போது யு.என்.பிகாரன்.

இன்று போர் இல்லாவிட்டாலும் பட்டினிப்போர் இருக்கின்றது. அப்பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஒன்றுபடவேண்டும். தேர்தல் ஒன்று குறித்து இப்பொழுது பேசுகிறார்கள்.

தேர்தலுக்குச் செல்ல விருப்பு வாக்கு கேட்க இன்னமும் நாம் சரிவரச் சேவைகளைச் செய்யவில்லை. போர் மீண்டும் தொடங்கி, மற்றொரு தேர்தல் நடத்தினால் பெரும் பிரச்சினை ஏற்படும். அதனால், எமக்கு போர் வேண்டாம். தேர்தல் ஒன்றும் வேண்டாம் என்றே கூறவேண்டியிருக்கிறது.

அதனால் நாட்டின் மக்களை ஒன்றுபடுத்தி, பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதை அவசரமாகச் செய்ய வேண்டும் - இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வாரம் நடைபெறவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாடு பற்றி தமிழ்நாட்டிலுள்ள இந்துப் பெரியார்களுடன் ஆலோசனை நடத்துவார். இங்கு இந்துக் கோயில்களுக்கு வேண்டிய உதவிகள் பற்றியும் ஆலோசனை நடத்தவுள்ளார். குறுகிய இவ்விஜயத்தை முடித்துக்கொண்டு விரைவில் நாடு திரும்பும் அமைச்சர் தி. மகேஸ்வரன் வரவு - செலவுத் திட்ட விவாதத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார். (ஐ)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படவேண்டிய சீரமைப்புத் தொடர்பாக பிரதமர் எடுத்துக் கூறினார்.

இது தொடர்பாக இரு வாரங்களுக்குள் பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

அதன்பின்னர் இதுகுறித்து தீர்மானிக்கலாம் எனச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஒன்றியத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நெடுங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ நெடுங்குளம் வீதியின மேற்குப்புறமாக மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர். அந்த வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள பகுதிகளில் உடனடியாக மக்கள் குடியமர முடியாது. பின்னரே அதற்கு அனுமதி வழங்கப்படும்.

★ கண்டி வீதிக்கு வடக்கே சித்துப்பாத்தி மயானத்தை அண்டிய பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர். அந்தப் பகுதியில் உள்ள கண்ணிவெடிகள் முதலில் அகற்றப்படும்.

★ பாஷையூர், குருநகர், நாவாந்துறை ஆகிய இடங்களில் கடற்கரையில் இருந்து தரையில் நூறு மீற்றர் தூரத்துக்கு மக்களை மீளக் குடியமர அனுமதிக்க முடியாது.

★ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள இராணுவ நிலையை ஜெயா கட்டடத்துக்கு இடம்மாற்றிவிட்டு, அந்தப் பகுதியில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படுவர்.

★ துண்டி மயானத்துக்கு சென்றுவர அனுமதிக்கமுடியும். அந்தப் பகுதியினை உள்ளடக்கிய அதி பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்கள் குடியமர உடனடியாக அனுமதிக்க முடியாது.

★ அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் முகாமிட்டிருக்கும் படையினரை வாபஸ் பெற நடவடிக்கை எடுக்கப்படும். (ஐ-3)

# செயலகத்தில் இன்று உயர் மாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.குடாநாட்டில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்கான உயர்மட்ட மாநாடு இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கில் மக்கள் மீள்குடியமர்தல், நாகர்கோவில் பிரதேசத்தை பார்வையிட அனுமதித்தல், ஊர்காவற்றுறைப் பகுதி மீனவர்களின் 'பாஸ்' நடைமுறை உட்பட பல விடயங்கள் குறித்து இந்தமாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் பணிப்பின் பேரில் கூட்டப்படவுள்ள இந்த மாநாட்டில் யாழ். மாவட்ட பிரதி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ஐ-10)

(மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்)

## மற்றொரு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரணடைந்தார்.

1985ஆம் ஆண்டு பிறந்த இச்சிப்பாய் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் இராணுவத்தில் இணைந்து பணியாற்றி வருகிறார்.

தங்களிடம் சரணடைந்த இச்சிப்பாயை புலிகள் உடனடியாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஒப்படைத்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியிடம் சிப்பாயைக் கையளிக்கும் வைபவம் நேற்று மாலை புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரி ஆர்.பி. சந்திரசேகரா புலிகளிடம் இருந்து சிப்பாயை பொறுப்பேற்றார்.

இதுபோன்று மயிலிட்டிப் பகுதியில் பணிபுரிந்த சிப்பாய் ஒருவர் கடந்த மூன்றாம் திகதி புலிகளிடம் சரணடைந்ததும் -

அவர் பின்னர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக படை அதிகாரிகளிடம் கையளிக்கப் பட்டது - தெரிந்தவையே. (ஐ-9)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளித்துவிடவேண்டாம் என்று மன்றாடியதை அடுத்தே கண்காணிப்புக் குழுவினர் அவரைப் பொறுப் பேற்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

சரணடைந்த சிப்பாயைக் கையளிக்கும் பொருட்டு புலிகள் தமது யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்துக்கு கண்காணிப்புக் குழுவினரை அழைத்திருந்தனர். அங்கு வந்த குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் ஒலே புரொன்டம், சரணடைந்த சிப்பாயை இராணுவத் தலைமையிடம் கையளிப்பதற்கு உடன்பட்டால் மட்டும் தாம் அவரைப் பொறுப்பேற்க முடியும் என்று கூறினார். ஆனால், சரணடைந்த சிப்பாயோ தன்னை இராணுவத் தரப்பிடம் கையளிக்க வேண்டாமென கெஞ்சிக்கேட்டுக் கொண்டார். அதனை அடுத்து சிப்பாயைப் பொறுப்பேற்காமலேயே கண்காணிப்புக் குழுவினர் திரும்பினர்.

பின்னர் மனித உரிமைகள் ஆணைக் குழுவினரிடம் சிப்பாயை கையளிக்க முடிவானது. (ஐ-9)

## பாடசாலை மாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார் சைக்கிளில் ஆயுதங்களுடன் வந்த முகமூடி நபர்கள் இருவர் தம்மை வழிமறித்தனர் என்றும் -

"மாத்தையா வரச்சொல்கிறார், வாரும்" என்று தம்மை அழைத்தார்கள் என்றும் -

தாம் மறுக்கவே தமக்கு இரண்டு தட்டுத் தட்டிவிட்டு கண்களைக் கட்டியவாறு மோட்டார் சைக்கிளில் எங்கோ அழைத்துச் சென்றனர் என்றும் அந்த மாணவன் வைத்தியசாலையில் வைத்துக் கூறினான்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டிச் சென்ற இடத்தில் வைத்து என்னைப் பற்றிய விவரங்களைக் கேட்டார்கள். நான் சொல்ல மறுத்தேன். அவர்கள் ஆத்திரமடைந்து என்னைத் தாறுமாறாகத் தாக்கினார்கள்.

எனக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அவ்வளவோடு மயங்கி விழுந்து விட்டேன்.

மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்த்தபோது நான் ஒரு காட்டுப் பகுதியில் பற்றைகளுக்கு அருகில் படுத்திருந்தேன். எனது சைக்கிள் எனக்கு அருகில் இருந்தது.

ஒருவாறாக சம்மாந்துறையில் உள்ள எனது வீட்டைச் சென்றடைந்தேன். தாடையில் பெரிய காயத்தால் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. முகம், கைகள், கால்கள் எல்லாவற்றிலும் காயங்கள் இருந்தன.

வீட்டில் உள்ளவர்கள்தான் என்னை வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.

- இப்படி அந்த மாணவன் தெரிவித்தான்.

சம்பவம்பற்றி பொலீஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது தாக்குதலுக்கு இலக்கானவர் முதலில் வைத்தியசாலையில் சேர்க்கப்படவேண்டுமென்று பொலீஸார் அறிவுறுத்தினர் என்று தெரிகிறது. விடுதலைப் புலிகளின் வீரமுனை அரசியல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவர்கள் இந்த விடயத்தை தமது கல்முனை மாவட்ட பணிமனையின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

விசாரணை நடத்தி தாக்குதல் நடத்தியவர்களை கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகப் புலிகள் உறுதியளித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. (ஐ-4)

## புலிகள் குழு இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர்னாட் குணதிலக்க ஆகியோருடன் ஆலோசகர்களான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, ஜோன் குணரத்ன, சானக ஜயசேகர ஆகியோர் இடம்பெறுகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் குழுவில் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் (தலைவர்), வி.உருத்திரகுமார், டாக்டர் ஜோய் மகேஸ்வரன், திருமதி அடேல் பாலசிங்கம் (செயலாளர்), அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் கேணல் கருணா ஆகியோர் இடம் பெறுவர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்ஹொக்கிலிருந்து தெற்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நக்கோம் படொன் நகரில் றோஸ் கார்டின் உல்லாச விடுதியில் நாளை மறுதினம் 31ஆம் திகதியிலிருந்து நவம்பர் 3ஆம் திகதி வரை இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன.

முக்கியமாகப் பாதுகாப்பு வலயங்களில் மக்களின் மீள்குடியமர்வுக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்குமான குழுவை நியமித்தல், வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளை கவனிப்பதற்கான கூட்டுச் செயலணியை அமைத்தல், புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்களே இந்த இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் எடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு குழுக்களினதும் விஜயத்தை ஒட்டி பாங்ஹொக்கில் குறிப்பாக பேச்சு நடைபெறும் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலேயே புலிப் பிரமுகர்கள் விமானம் ஏற இருப்பதால் விமான நிலையப் பகுதியிலும் பலத்த பாதுகாப்பு. (ஐ)


**IPAS INSTITUTE OF PROFESSIONAL ACCOUNTING STUDIES**

Examination Dates
CIMA Foundation — may 2003
Chartered Accountancy Foundation — July 2003
aat Stage - I — June 2003

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. புதிய அனுமதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். கலை, வர்த்தக, விஞ்ஞான, கணக்குத்துறை மாணவர்களும் இக் கற்கை நெறிகளை பயிலமுடியும். மேலதிக விவரங்களுக்கு IPAS, 100, பிரதான வீதி, யாழ்ப்பாணம். அலுவலக நேரம் சனி, ஞாயிறு காலை 8.00 - 5.00 மணி வரை. (C-24530)

KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS

KINGS ELECTRONICS

Intel Pentium - III 1200 MHz Computer

Intel Pentium - III 1200 MHz Processor with
. 256 KB Cache Memory
. MSI VIA Chipset Motherboard
. 40 GB Hard Disk Drive
. 128 SDRam
. 15" S.V.G.A Digital Color Monitor
. 8 MB VGA & 32 Bit Sound
. 1.44 MB Floppy Disk Drive
. ATX Tower Case
. 108 Win 98 Keyboard
. Mouse & Pad
. 1200W Soundstar Speaker
. Samsung 52X CD Drive
. Dust Cover

ஒரு வருட உத்தரவாதத்துடன்

56750/=

The above Configuration with
Intel Pentium III 1133 Processor 54,900/=
Intel Celeron 1000 Processor 52,250/=

தீபாவளி மலிவு விற்பனை
எமது அனைத்து Audio Cdகளும் 10% கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
பக்திப் பாடல்கள் - 170/=
05-11-2002 வரை மட்டுமே.

எமது நிறுவனத்தில் வேறு கிளைகள் இல்லை.

T.V, VHSடெக், VCDடெக், MP3 டெக், DVD டெக், Audio Cd, Video Cd, Empty Cds, Fan, Rice Cooker. மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

Info Access PCI Internet Phone Card Available
(UK, USA, Canada Calls, Only Rs. 7/= per minute)



கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

No 64, Stanley Road, Jaffna TEL. NO : 021-2223857
இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS

CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்
வகையீடு A/L 2004
Wed. 6 - 7 p.m.
Limits Thurs. 6 - 7 p.m.
By:- பிரதீபன்
காந்தப்புலம்
Wed., Thurs. 3 - 4 p.m.
ஆரம்பம் :- 30.10.2002
By:- சிவலிங்கம்
CHEMISTRY Paper
Wed. 6 - 7 p.m.
General 6 - 7
Inorganic 7 - 8
By:- அன்பழகன்
(10040)

ஈசன் அக்கடமி
K.K.S. வீதி, கோண்டாவில்
அளவையியல்
A/L DAY CLASS
குறியீட்டு அளவையியல்
Wed. 3.00 p.m.
Thu., Fri. 10.00a.m.
A/L 2003, 2004
குறியீட்டு ஆக்கம்
Wed., Thu., Fri., 4.00 p.m.
ஆசிரியர்:- S.T.ராஜன்
ஆரம்பம் : 30.10.2002 (Wed.)
Note:- S.S மோகன் ஆசிரியரின் தமிழ் வினாவிடை - வகுப்பு நடைபெறுகின்றது.
(10001)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.